உலகத்தமிழ

www.padippakam.com

3-12


# மக்கள் தமிழகம்

கும்பம் - தி.பி. 2033
(மார்ச்சு - 2002)

விலை : உரு. 5.00

## ழுந்தது தமிழ்த் தேசிய முன்னணி!

## வீழட்டும் இந்தியப் பார்ப்பனியம்!



தமிழக அரசியல் பண்பாட்டு விடுதலை மாத இதழ்

படிப்பகம்

www.padippakam.com

# தில்லி பெரியார் மையம் இடித்தது இந்தியப் பார்ப்பனியம்!

பெரியார்மையம் இடிக்கப்பட்டதற்காக செயலலிதாவிடம் மன்றாடி அறிக்கை விடச்சொல்கிறார் வீரமணி. கண்ணகி சிலை களவு போனதற்காக இல. கணேசனோடு சேர்ந்து போராட்டம் நடத்துகிறார் கருணாநிதி.

பெரியார் மையம் இடிக்கப்பட்டதும் கண்ணகி சிலை களவு போனதுமாகிய இரண்டுமே தமிழினத்திற்கு எதிரான செயல்களாக இருக்கும்போது வீரமணியும் கருணாநிதியும் இரண்டையும் ஒன்றுக்கொன்று எதிராக நிறுத்தி வாய்ச்சிலம்பாடி மக்களைக் குழப்புகின்றனர்.

பார்ப்பனியத்தின் மூடநம்பிக்கைகளை எதிர்த்தவர் பெரியார். அவர் பெயரில் இருந்த மையம் இடிக்கப்பட்டிருக்கிறது. தலைவிரி கோலமாக காட்சிதரும்கண்ணகி சிலையால் தனது ஆட்சிக்கு ஆபத்து எனச்சொல்லி மூடநம்பிக்கையின் அடிப்படையில் கண்ணகி சிலை களவாடப்பட்டிருக்கிறது. இரண்டு அடாவடித்தனமும் மூடநம்பிக்கைகளை பரப்பித் தமிழர்களை முட்டாள்களாக்கி ஆளுமை செய்துவரும் பார்ப்பனியத்தின் செயல்பாடுகளாகவே இருக்கும்போது ஒன்றுக்கொன்றை எதிராகப் பார்க்கும் கருணாநிதியையும் வீரமணியையும் என்னவென்று சொல்வது? இருவரும் தமிழர்களின் தலைவர்கள் என்றுவேறு சொல்லிக்கொள் கிறார்கள்.

சட்டத்திற்குப் புறம்பாக கட்டப்பட்டதால் பெரியார் மையத்தை இடித்தோம் எனச்சொல்லும் பார்ப்பனிய சக்திகள் சட்டத்தை மீறி இராமர் கோயில் கட்டுவோம் எனக் கொக்கரிக்கின்றனர். ஆக சட்டம் அவர்களைப் பொறுத்தவரை பார்ப்பனியத்திற்கு ஆதரவாக இருந்தால் ஏற்றுக்கொள்வார்கள். எதிராக இருந்தால் சட்டத்தைத் தூக்கி எறிவார்கள். இதுதான் அவர்களின் மனுதர்மக் கோட்பாடு.

அவர்களின் ஆளுமைக்கு எதிரான கருத்துகளையும் சின்னங்களையும் அழித்து, ஆயிரம் பொய்களைச்சொல்லி, மூடநம்பிக்கைகளைப் பரப்பி அதற்கு ஞாயம் கற்பிப்பதிலும் அதன் வழி பெரும்பான்மை தமிழ் மக்களை தங்கள் ஆதரவாளர்களாக மாற்றுவதிலும் அவர்கள் சரியாகத்தான் இருக்கிறார்கள்.

நாம்தான் சரியாக இல்லை. சமூக அளவில் சாதியமாகவும் அரசியல் அளவில் இந்தியமாகவும் நிறமாறிக்கொள்ளும் பார்ப்பனியத்தை அடையாளம் காணுவதில் நாம்தான் சரியாக இல்லை. பார்ப்பனியம் நிலைகொண்டுள்ள இந்தியக்கட்டமைப்பும் சங்கர மடங்களும் உடைக்கப்பட வேண்டியவை என்னும் கருத்தைப் பரப்புவதிலும் அதன்வழி நம் தமிழக மக்களை அணிதிரட்டுவதிலும் நமக்குள் தான் ஒற்றுமையில்லை.

இந்தியப் பார்ப்பனியத்தை உடைக்காமல் பெரியார் மையங்களை காக்கமுடியாது! சங்கரமடங்கள் தகர்க்கப்படாமல் கண்ணகி சிலைகளைக் காப்பாற்ற முடியாது!

# கண்ணகி சிலை கடத்தல் மறைத்தது தமிழக ஆரியம்!

## சாதிக் கொடூரன் ஒழிப்பு விழா

- சென்னை –மயிலார்ப்பூர் அம்பேத்கர் பாலம் அருகில் சாதிக்கொடூரன் ஒழிப்பு விழா நடைபெற்றது. மாலை பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சுப.வீ. (தமிழர் தேசிய இயக்கம்) சந்திரபோசு (தியாகி இம்மானுவேல் பேரவை) ஆதித்தமிழன் (அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கம்) இசைமொழி (மக்கள் எழுச்சி மன்றம்) ஆகியோர் சாதிக்கொடூரன் ஒழிப்பு குறித்து உரையாற்றினர்.

  தஞ்சை வீரசோழன் குழுவினரின் தப்பாட்டம் நடைபெற்றது, நிகழ்ச்சியை மக்கள் எழுச்சி மன்றம் ஒருங்கிணைத்திருந்தது.

- சென்னை –பள்ளிக்கரணையில் சாதிக்கொடூரன் ஒழிப்பு விழாவில் பொங்கல் விழாவும் நடைபெற்றது.

  தஞ்சை வீரசோழன் தப்பாட்டத்துடன் தொடங்கிய விழா பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் எழுச்சியுடன் நடைபெற்றது. தகரி கலைக்குழு, திவ்யா சங்கீதாலயா குழுவினரின் கலைநிகழ்ச்சிகள், பள்ளி மாணவர்களின் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

  தோழர் சுப.வீரபாண்டியன் (தமிழர் தேசிய இயக்கம்) சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியை பள்ளிக்கரணை தமிழ்மக்கள் பேரவை ஒருங்கிணைத்திருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த் தேசிய முன்னணி

மார்ச்சு 17–ஆம் நாள் தமிழ்த்தேசிய முன்னணியின் தொடக்கவிழா நடக்கிறது. இந்த முன்னணியில் தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி, தமிழ் தமிழர் இயக்கம், தமிழர் தன்மானப் பேரவை ஆகியவற்றுடன் தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கமும் இணைந்துள்ளது.

தமிழ்த்தேசிய இனஉரிமை எழுச்சி வரலாற்றில் இது ஒரு முகாமையான கட்டம்.

இந்த முன்னணி திடுமென ஒரு நாளிலோ ஒரு பொழுதிலோ அமைக்கப்பட்டு விடவில்லை. இந்த முன்னணியில் உள்ள அமைப்புகளும் ஏதோ திடுமெனத் தோன்றிய அமைப்புகளும் இல்லை.

த.ஒ.வி.இ. யைப் பொருத்த அளவில் அது கடந்த 1991 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது என்றால், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி அதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்னரே தோற்றம் கொண்டது.

தமிழ்த் தமிழர் இயக்கமோ ஐந்தாண்டுகால வரலாற்றடிப்படையைக் கொண்டது. தமிழர் தன்மானப் பேரவைக்கு இரண்டாண்டுக் காலப் பயிற்சி உண்டு.

ஆயினும் இந்த இயக்கங்கள் இந்த அளவு கால வளர்ச்சியைக் கொண்டது எனில், அவற்றில் உள்ள தோழர்கள் பலரும் அதற்கு முன்னர் பல்வேறு கட்சிகளில் இருந்த வகையில் மேலும் இருப்பத்தைந்து ஆண்டுகாலப் படிப்பினைகளையும் கொண்டவர்.

இவற்றின் தொகுப்பில் வளர்ந்த இந்த இயக்கங்களின் தோழர்கள் ஒருங்கிணைந்து கூடியே இந்த முன்னணியைத் தொடங்கியுள்ளனர்.

இந்த முன்னணி முன் வைத்திருக்கிற வரைவு அறிக்கை பலமுறை திறனாயப் பெற்று திருத்தம் செய்யப் பெற்று வெளிவந்திருக்கிறது.

அது மேலும் திருத்தம் பெற வேண்டுமான நிலைக்காகத் தம் கதவுகளை அடைத்துக்கொள்ளவும் இல்லை.

செழுமையான, சரியான முன்னணி சக்தியாக வளரவேண்டுமான அக்கறையும், ஆர்வமும் அந்த முன்னணியில் இணைந்துள்ள அமைப்புகளின் தோழர்கள் அனைவருக்கும் உண்டு.

முன்னணி என்பது ஏதோ விருப்பத்திற்காகக் கட்டப்படுவது அன்று.

எல்லாரும் ஒன்று சேர வேண்டும் என்று பொதுப்பட மக்களின் கோரிக்கை சொல்லுவதால் இப்போதைக்கு கூடிவிட்ட கூட்டணியும் இல்லை.

தமிழ்த்தேச விடுதலைக்கென, தமிழ்தேசக் குடியரசை நிறுத்துவதற்கென முன்னெழுந்துள்ள அமைப்புகள் தங்களின் முதன்மை எதிரியைத் தனிமைப்படுத்தி எதிர்ப்பதற்கான ஒரு புரட்சி செயல்திட்டமே முன்னணி.

இந்த முன்னணியில் உள்ள அமைப்புகள் அனைத்தும் தங்களின் சமூக, அரசியல், பொருளியல் வழிபட்ட ஆழ்ந்த அகன்ற பார்வைகளை, கணிப்புகளைப் பகிர்ந்து கொள்வதோடு ஓர் இயக்கத்தின் நிலைப்பாட்டை மற்ற ஓர் இயக்கத்தின் நிலைப்பாட்டோடு எந்த அளவுப் பொருத்தி வைத்துச் செயல்பாடுகளைத் தொடங்க முடியுமோ அந்த அளவு செயல்படுகின்றன.

ஆக – முன்னணியில் உள்ள அமைப்புகள் அனைத்திற்கும் தமிழ்த்தேசிய விடுதலை என்கிற மையப்புள்ளி என்பதில் மட்டுமல்லாமல் பல்வேறு கோணங்களிலும் ஒன்றுபட்ட கொள்கை நோக்கம் உண்டு.

அதே போது, பாட்டாளிய வகுப்பின் வல்லாண்மை குறித்தும், சாதி ஒழிப்புத் திட்டம் என்பதான வகையில் தாழ்த்தப்பட்டோர் தலைமை குறித்த செய்திகளிலும், பார்ப்பனர் இணைப்பு குறித்த கருத்துகளிலும், சிறுபான்மை இனமக்களின் வகைபாடு குறித்தும் சில கருத்து வேறுபாடுகள் உண்டு.

33

உழைக்கும் மக்கள் தமிழகம்

தொடர்புக்கு :

'உழைக்கும் மக்கள் தமிழகம்'

57, இராசகோபால் தோட்டம்,
கருங்கல்பாளையம்,
ஈரோடு – 3.



படிப்பகம்

www.padippakam.com

இருப்பினும் இவையாவும் இந்த இயக்கங்களின் அடிப்படை நோக்கமான தமிழ்த்தேசிய விடுதலை நோக்கிலான தமிழ்த்தேசக் குடியரசை நிறுவுகிற கொள்கைப் போக்குக்கு எதிர்மையானவை அல்ல.

எனவே அக்கருத்து வேறுபாடுகள் தொடர்ந்து பேசப்பெற வேண்டும் என்பதும், பேசுவதன் மூலம் ஒற்றுமைப்புள்ளியை நோக்கி இவ்வியக்கங்கள் நகரவேண்டும் என்பதும் காலத்தின் தேவையாக இருக்கிறது. இந்த அமைப்புகளும் அதை உணர்ந்த நிலையிலேயே பொறுப்புணர்வோடு அது பற்றிய கலந்தாய்வுகளைத் திறந்த மனத்தோடு செய்துகொண்டிருக்கின்றன.

எனவே காலத்தால் கொள்கை கோட்பாட்டில் அரசியல் வேறுபாடுகள் குறைந்து இயக்கங்களின் தனித்தேவைகளுக்கான அழுத்தம் இல்லாமல் போகிற சூழல் ஏற்படலாம், ஏற்படவேண்டும்.

அத்தகைய ஏற்பாடுகளுடனான ஒன்றிணைவே சரியானதாகவும், முறையானதாகவும் இருக்கமுடியும். மற்றபடி ஒற்றுமைப்படவேண்டும் என்பதற்காக நம் உடன்பாடுகள் எவை முரண்பாடுகள் எவை என்பதான அறிதல் அற்ற நிலையில் திடுமென ஓர் இயக்கத்தில் அனைவரையும் இணைத்துக்கொள்ளுகிற முயற்சிகள் அதன் விரைவான இணைவு போலவே விரைவான அளவில் பிரிந்து விடும்.

இணைவும் பிரிவும் விருப்பத்தின் பாற்பட்டது அன்று. அது தேவையின்பாற்பட்டதும் கொள்கை வழி விளங்கிக் கொள்ளுகிற அறிவின் பாற்பட்டதும் ஆகும்.

விருப்பம் என்கிற உணர்ச்சி, செயல்களுக்குத் தூண்டுகோலாக இருக்கமுடியுமே அல்லாமல் அடித்தளமாக இருக்கமுடியாது.

இந்த நிலைகளையெல்லாம் கணக்கில் கொண்டே தமிழ்த் தேசிய முன்னணி தன் உறவுகளை வலுப்படுத்திக்கொண்டுள்ளது.

வலுவான ஒரு முன்னணி காலத்தின் தேவை கருதி பேரெழுச்சி கொண்டு வீறுநடை போட அணியமாகிவிட்டது.

புழுத்துப்போன தேர்தல் சாய்க்கடை அரசியல் போக்குகளைக் காறிஉமிழ்ந்து கனன்றெரியும் தமிழ்த் தேசிய உணர்வு எழுச்சியில் நடையிடத் தொடங்கிவிட்டது தேசிய முன்னணி.

தனித்தலைமைகளுக்கும், தனிமாந்த வழிபாடுகளுக் கும் இடம் கொடுக்காமல் கூட்டுத் தலைமைக்கும் கொள்கை நோக்கிற்கு அடித்தளமிட்டுத் தமிழ்த் தேசப் போர்ப்பறையை எழுப்பத் தொடங்கி விட்டது தமிழ்த் தேசிய முன்னணி!

வல்லரசியல் வல்லாளுமை போக்கை வெட்டி வீழ்த்தி ஓட விரட்டவும்,


இந்தியப் பார்ப்பனியக் கூட்டமைப்பின் கொடுமுடியை ஆட்டி அறுக்கவும்,

ஆதிக்கச் சாதிகளின் ஆணிவேரைப் பிடுங்கி எறியவும்,

போர்ப்பறைக் கொட்டுகிறது
தமிழ்த் தேசிய முன்னணி!

புறப்படுவோம்...! போராடுவோம்...!

## பாவலரேறு தமிழ்க்களம்
## தமிழ்த்தேசிய எழுச்சிக்கான கல்விக்களமாகட்டும்!



கடந்த 19–1–2002 அன்று பாவலரேறு தமிழ்க்களம் தொடக்கவிழா சிறப்போடு நடைபெற்றது. தமிழ் மொழி இன நாட்டு விடுதலைக்காகத் தம் வாழ்நாள் முழுமையும் எவ்வகை சமரசத்திற்கும் ஆட்படாமல் நின்றொளிர்ந்த பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் நினைவிடமான தமிழ்க்களம்– தமிழக வரலாற்றின் விடுதலைக்களமாகத் திகழ்கிறது.

மொழிஉரிமையை வெறுமனே தூய தமிழ் ஆக்க வழியில் மட்டும் உணர்த்தாமல் தமிழ்நாட்டு விடுதலை மட்டுமே அனைத்து உரிமைகளையும் பெற்றுத் தரும் என்கிற வகையில் இந்திய ஆதிக்கர்களின் கொடுஞ் சட்டங்களால் கடுஞ்சிறைக்குட்பட்டார் பாவலரேறு ஐயா. அவர்களின் போராட்ட வாழ்க்கை முறைகளும்அவரின் எழுத்துகளும் இளைஞர்களுக்கான கல்விக்கூடமாகவும், தமிழ்த்தேசியத் திற்கான எழுச்சியகமாகவும், திகழ்கிறது.

அவ்வகையில் பாவலரேறு தமிழ்க்களம் அய்யா அவர்கள் பற்றிய கல்விக்கூடமாகவும், தமிழ்த்தேசிய எழுச்சிக்கான கல்விக்களமாகவும் அமைக்கப்படவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# அன்புத் தோழனுக்கு..........

நீண்ட நாளாக நாம் எண்ணியிருந்த வகையில் தமிழக விடுதலையில் கவனம் செலுத்துகிற அமைப்புகளுக்கிடையில் முன்னணி மீண்டும் தோற்றங்கொண்டிருப்பது கண்டு நீயும் மகிழ்ந்திருப்பாய்.

எத்தனை நாள்கள் – இரவுகள் நாம் இதுபற்றிப் பேசி நம் ஏக்கங்களைப் பகிர்ந்திருப்போம்.

தமிழ்த்தேச இயக்கங்கள் ஒற்றுமைப் பட முன்வராமல் பகைமைப்பட்டுப் போவதில் அல்லவா முனைப்புக்கொள்கின்றன - என்று.

ஆனால் அத்தகைய நம் எண்ணங்களுக்கு இப்போது வழித்தடம் பிறந்திருக்கிறது.

தோழனே – உனக்கு நினைவிருக்கிறதா?

ஆம் – 1984 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் சத்தியமங்கலத்தில் கூடிய அந்தச் செயற்குழுவின் விரிவான பேச்சுக்கள்.

அப்பப்பா.. அந்த இனிய எதிர்பார்ப்புகள் – திட்டங்கள் எல்லாம் எனக்கு இன்னமும் பசுமையாக நினைவிருக்கின்றன.

தூய்தமிழ் இயக்கத்தின் அடித்தளத்தோடும், மொழி – இன நாட்டு விடுதலையின் நோக்கத்தோடும் இயங்கிய **ஐயா பெருஞ்சித்திரனார்** அவர்களும், பெரியார் சமவுரிமை இயக்கம் எனும் பெயரில் ஐயா **ஆனைமுத்து** அவர்களும், அறிவியக்கப் பேரவை சார்பில் ஐயா **சாலை இளந்திரையனார்** அவர்களும் தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி சார்பில் **புலவர் கலியபெருமாள்** மற்றும் தோழர்களும் இ.பொ.க.(மா–லெ) மைய சீரமைப்புக் குழு – சார்பில் எசு.என்.நாகராசன் மற்றும் முன்னணித் தோழர்களாக **எசு.வி.இராசதுரை, தமிழக ஆய்வரண்** தோழர்கள், உழவர் கழகத்தோழர்கள்.

அப்பப்பா! ஏறத்தாழ முப்பதுக்கும் மேற்பட்டோர் இருநாட்கள் முழுமையும் கூடித் தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி அமைத்தார்களே....

தமிழக வரலாற்றிலேயே முதல்கூட்டணி அல்லவா அது.

இன்றைக்கு அதை அமைக்க முனைந்த அறிஞர்கள் பலரும் மறைவுற்றுப் போயிருந்தாலும், அவர்கள் தொடங்கிச் செய்த அந்தப் பெரு முயற்சிகளை யாரால் மறந்துவிட முடியும் அல்லது மறுத்து தான் விட முடியும்.

தொடர்ந்த அந்தக் குழுவினர் விழுப்புரத்திலும், சென்னையிலும் பேசிய பேச்சுகளும் வகுத்த நெறி முறைகளும் எவ்வளவு ஆழமானவை.

"தம்பி... என் உயிர்க் கொள்கை தூய தமிழ்க்கொள்கை அதைக் கூட நான் ஒதுக்கி வைத்துவிட்டு வருகின்றேன். தம்பி.... இரண்டில் ஒன்று பார்த்துவிடலாம். தமிழக மக்கள்விடுதலையை வென்றெடுக்கலாம் " என்று ஐயா பெருஞ்சித்திரனார் அவர்கள் பேசிய பேச்சுகள் இன்றுமல்லவா நம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன என்று நீயே பலமுறைப் பகிர்ந்து கொண்டிருக்கிறாய்.

ஆயினும், தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி என்பது ஒரு கூட்டமைப்பா , தனிஇயக்கமா என்று முடிவெடுப்பதிலும், தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணியில் உறுப்பியக்கமாக இருந்த இ.பொ.க. மா.இலெ. (மையச் சீரமைப்புக்குழு) கொண்டிருந்த நிலக்கிழமைத் தொடர்பான வகைப்பாட்டின் வழிமுதன்மை முரண்பாட்டாளர்களைக் கணிப்பதிலும்,

தமிழக மக்கள் விடுதலைக்கூட்டணியின் உறுப்பியக்கமாக இருந்த இயக்கங்கள் இந்திய வகையிலான கட்சியை ஏன் வைத்திருக்க வேண்டும் என்பதாகவும்

பல சிக்கல்கள் த.ம.வி.கூ.வுக்கு ஏற்பட்டதை நாம் நன்கறிவோம்.

உடனடியாக அனைத்து இயக்கங்களையும் கலைத்துவிட்டு த.ம.வி.கூ.யாகவே இருக்கவேண்டும்– என்கிற கட்டாயத்தை அறிவியக்கப்பேரவை இயக்கத்தினரும் பெரியார்சமவுரிமைக் கழகத்தினரும் கடுமையாக முன் வைத்ததும்; அப்படித் திடுமென நடந்துவிடாது, இயங்கியல் போக்கில்தான் அதுபோன்ற நிலைவரும்–என விளக்கமளித்து ஒப்பாமல் போனதும் தொடர்ந்த அந்தக் கூட்டணியின் செயற்பாடுகளை முன்னுக்குக் கொண்டுபோகவில்லை என்பதை நாம் அறிவோம்.

*"அனைத்து வல்லரசுகளின்கொள்ளைகளைக் குழிதோண்டி புதைக்கவும், அரசு தரகு முதலாளி வர்க்கத்தின் மற்றும் அதிகாரவகுப்பின் கொட்டங்களை ஒழிக்கவும், சாதிய நிலக்கிழமை அடிமைத்தனத்திற்கு முடிவு கட்டவும், உண்மையான மக்கள் குடியாட்சியை அமைத்திடவும் தமிழக மக்களின் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டது அக்கூட்டணி"*



படிப்பகம்

www.padippakam.com

மேலும் "அவ்வகையில் இந்தியாவில் வாழும் பிற தேசிய இனங்களின் புரட்சி வழி விடுதலைக்குச் செயல் வடிவமும் ஆதரவும் இக்கூட்டணி நல்கிடும். மற்றும் உலகில் போராடும் அனைத்து மக்களின் உரிமைப் போராட்டங்களிலும் தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி பக்கத்துணையாக நிற்கும்"

என்றுமாக அக்கூட்டணி வகுத்துக் கொண்ட கொள்கைத் திட்டத்தில் எந்தக் குழப்பமும் இருந்திடவில்லை தானே.

ஆனால் நடைமுறையில் ஏற்படுகிற சிக்கல்களும் அதைச் சரியானபடி அணுகாமல் போனால் ஏற்படுகின்ற பிறழ்ச்சிகளும் எந்த அளவு ஒரு சரியான கூட்டணியைக் கூட முன்னுக்கு நகர்த்தவிடாமல் செய்துவிட்டது என்பதை நீயும் கணித்திருப்பாய்.

தோழனே...

வரலாற்றில் பதியப் பெற்றிருக்கிற இத்தகு முயற்சிகளும் அதனால் கிடைத்த பட்டறிவுகளும் ஏதோ அவர்களுக்கு மட்டுமே உரித்தானது இல்லை. அவர்களைத் தொடர்ந்து செயல்படுகிற நமக்கும் அத்தகைய படிப்பினைகளும் தேவை தானே!

இப்படியாக இது குறித்து எண்ணுகிற போது நீ முன்பு எழுதிய மடலை அண்மையில் மீண்டும் படித்தேன். அதுதான், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கமும், விடுதலைச்சிறுத்தைகள் அமைப்பும், தலித் பண்பாட்டுப் பேரவையும், தமிழக மனித உரிமைக்கழகமும், தியாகி இம்மானுவேல் பேரவையும், ஆதித்தமிழர் பேரவையும், உரிமைகோருவோர் ஒருங்கிணைப்புக் குழுவும் அமைத்த முன்னணி குறித்த மடல் .

*தமிழகத் தாழ்த்தப்பட்டோர் விடுதலை முன்னணி* அமைக்கப்பட்டபோது நமக்கெல்லாம் மகிழ்ச்சியாகத்தான் இருந்தது.

அதில் முன் வைக்கப்பட்டிருந்த வரையறைகள் நெகிழ்வுப் போக்குகளைக் கட்டுப்படுத்துவதாகவே அமைந்திருந்தன. இருப்பினும் அந்த முன்னணியின் போக்கு பின்னர் இறுதியில் எப்படியெல்லாம் நீர்த்துப் போய்விட்டது.

93-ம் ஆண்டு இறுதிப்பகுதியில் அமைக்கப்பட்ட அந்த முன்னணிகளுக்கான வரையறைகள் குறித்து உனக்கு தெரிந்திருந்த போதும் மீண்டும் நினைவுக்காக எழுதுகின்றேன்.

*1. பாராளுமன்ற, சட்டமன்ற தேர்தல் பாதையை மறுப்பது. அதேபோல் பாராளுமன்ற சட்டமன்ற தேர்தல் பாதை நீடிக்கிறவரை இரட்டை வாக்குரிமைக்கான தேவையை மக்கள் நடுவில் முன்வைப்பது.*

*2. மதம் சார்ந்த தாழ்த்தப்பட்ட அமைப்புகளை இக்கூட்டமைப்பில் உறுப்பியக்கங்களாக ஆக்க முடியாது. இக்கூட்டமைப்பின் உறுப்பியக்கங்கள் எந்த வகையிலும் மத நிறுவனங்களோடு தொடர்பு வைத்திருக்கக்கூடாது. தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்தும் இந்து கிறிஸ்துவமதத்தை எதிர்த்துப் புறக்கணிப்பது.*

*3. தாழ்த்தப்பட்டோர் விடுதலையுடன் தமிழக மக்கள் விடுதலையை வென்றெடுக்கத் தாழ்த்தப்பட்டோர் தலைமையில் தமிழக உழைக்கும் மக்களாட்சியை நிறுவுவது.*

என்கிற அடிப்படை வரையறைகளின் கீழ் இயங்கத் தொடங்கிய முன்னணியின் உறுப்பியக்கங்கள் சில வெளிப்படையாக இந்த நிலைபாடுகளுக்குக் கட்டுப்பட்டு இயங்குவதுபோல் இருந்தாலும், திரைமறைவில் அவை தேர்தல்பாதையை நாடுவதற்கான அடித்தளங்களைப் போடத் தொடங்கியதை எண்ணி நாம் மனம் வருந்திப்பேசியவை கொஞ்சமா, நஞ்சமா? தாழ்த்தப் பட்டோர் விடுதலைக்கான, நூற்றுக்கணக்கான இயக்கங்கள் புற்றீசல்களாய்ப் பெருகிக் கிடந்ததற்கு இடையில் அரிதாகக் கூடிய அந்த முன்னணி அமைப்பு எந்த அளவு அது மேற்கொண்ட வரையறைகளுக் குள்ளாக நிற்காமலேயே சிதைவுற்றுப் போனது என்பதை நாம் கலந்திருக்கிறோம்.

இன்றைக்கு முற்றிலுமாகத் தேர்தல்பாதையில் மூழ்கிக்கிடக்கின்ற விடுதலைச்சிறுத்தைகள் தன் முழுமையானச் சந்தர்ப்பப் போக்கில் மூழ்குவதற்கு அன்றையிலிருந்தே கிறிஸ்துவ நிறுவனங்களின் தூண்டுதல்கள் இருந்ததை எந்த அளவு வருந்திக் கலந்துகொண்டோம்.

தமிழகத் தாழ்த்தப்பட்டோர் விடுதலை முன்னணி செயலிழந்து போனபோது ஏற்பட்ட மன அழுத்தம் நம்மை எத்தனை இரவுகள் விழிக்கவைத்து வருத்தங்கொள்ள வைத்தன.

நம்மை நாமே தேற்றிக்கொண்டு நம் செயற்பாடுகளைத் தொடரத்தானே செய்தோம்.

அந்த எண்ண அழுத்தத்தில்தான் நீ பேசிக் கொண்டிருப்பதை நான் உணர்கிறேன்.

அந்தப் படிப்பினைகள் போல், **தமிழ்த்தேசிய முன்னணி** போய்விடக்கூடாது என்றும் தமிழ்த்தேசிய முன்னணியில் இணைவதிலும் ஏற்பட்ட தயக்கம் குறித்தும் உனக்கும் நிறைய கருத்து இருக்கும்.

தோழனே நாம் ஒன்றைக் கருதவேண்டும். இயக்கங் களின் நடைமுறைகளில் பிழைகள் ஏற்படுகிறபோது சறுக்கல் ஏற்படுகிற போது நாம் இப்பக்கத்தில் ஈடுபடுவதே



படிப்பகம்

www.padippakam.com

தவறு என்று விட்டுவிடுவதில்லை. திறனாய்வும், தன்னாய்வும், நம்மை முழுமையாக எழுச்சிக்கொள்ளவும், வினையாற்றவும் வைக்கின்றன.

அதுபோல்தான் முன்னணிகளும். முன்னணிகளில் ஏற்படுகிற பிழைகளுக்கு சறுக்கல்களுக்கு முன்னணி அமைப்புத் தோழர்களும் முழுமையாக முகங்கொடுத்து, திறனாய்வும், தன் திறனாய்வும் செய்து கொள்வார் களேயானால் இங்கு எந்தச் சிக்கலும் இல்லை தானே.

இயக்கத்தில் தன்னிலைப்போக்கினால், தோழர் களுக்கிடையில் ஏற்படுகின்ற புரிதல் இன்மையால் சிலசிக்கல்கள் ஏற்படுகின்றன என்றால், முன்னணியில் குறுங்குழுப்போக்கினால் அமைப்புகளுக்கு இடையில் ஏற்படுகிற புரிதல் இன்மையால் சில சிக்கல்கள் ஏற்படலாம். சரியான வரையறைகளும், தெளிந்த கொள்கைப் புரிதல்களும் இருக்குமாயின் முரண்கள் கூட பெருமளவில் வருவதற்கு வாய்ப்பில்லை.

ஆனால் அப்படியும்வருகிற முரண்பாடுகளைப் பேசி நெறிப்படுத்த அமைப்புத் தோழர்களாலேயே முடியும் என்பதை நீயும் ஒப்புவாய்.

அன்புத் தோழனே...

நம் வினைமுயற்சி நெடியது. நம் நோக்கம் வலியது.

அதன் பாதையில் நாம் பல்வேறு வெற்றிகளை அடைந்து முன்னேறிச்செல்வதைப்போல பல்வேறு தடைகளையும் சந்திக்கத்தானே வேண்டும்.

தடைகளைச் சரிசெய்து திறம்பட முன்னேறுவதுதானே நம் திறனாக இருக்க முடியும்.

அத்தகு திறன்களை தமிழ்தேசிய முன்னணியின் அமைப்புகள் அனைத்துமே பெற்றிருக்கின்றன.

எனவே, ஏற்படுகிற நெகிழ்ச்சிகளுக்கு ஏற்ப அதை நெறிப்படுத்துகிற விரிந்த உணர்வோடு நாம் கை கோர்ப்போம்.

முரண்பாடுகள் இல்லாமல் செயல்கள் இல்லை.

செயல்களை முன்னெடுத்துச்செல்ல முரண்பாடு களின் கூறுகளைத் தெளிவாக ஒன்றை மற்றொன்றாக்குவதன் வழி விரைவதுமே இயங்கியல் – இயக்கம் – செயல்.

தோழனே....

தமிழ்த்தேசிய முன்னணியினர் நாம் எனும் உணர்வே நம்மை நமக்கு உணரவைக்கும்; நம்மைப் பிறர்க்கும் உணரவைக்கும்.

பிற உன் மடல் கண்டு.
தோழமையுடன்,
**வேட்பன்.**

## அணைப்பாளையத்தில் ஆதிக்கச் சாதிவெறித்தனம்!

## படிச்சுப் பட்டம் பெற வேண்டாம்! சாதிப்பட்டம் போதும்!

*எங்கள் பிள்ளைகள் படிக்காவிட்டாலும் பரவாயில்லை தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் சமைத்துப்போடுவதை எங்கள் குழந்தைகள் சாப்பிடக்கூடாது என்று தங்கள் குழந்தைகளைப் பள்ளியைவிட்டே நிறுத்திவிட்டனர், ஆதிக்கச்சாதிக் கவுண்டர்களும் நாயக்கர்களும்.*

*ஈரோடு, ஊத்துக்குளி அருகே உள்ள அணைப்பாளையத்தில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளியில்தான் இந்தக் கொடூரம் நடந்துள்ளது. சத்துணவுக் கூடத்திற்குச் சமையல் உதவியாளராக கல்யாணி என்னும் அதே ஊரைச்சேர்ந்த தாழ்த்தப்பட்ட பெண் வேறு ஊரிலிருந்து மாற்றலாகி வந்திருக்கிறார். ஒருநாள் கூட அவள் சமைப்பதை எங்கள்குழந்தைகள் சாப்பிடக்கூடாது; அவ்வளை உடனே மாற்றல் செய்யுங்கள் என்று கூக்குரலிட்டிருக்கின்றனர் உள்ளூர் ஆதிக்கச் சாதிக்கவுண்டர்களும் நாயக்கர்களும். தலைமை ஆசிரியர் அதற்கு இசைய மறுத்துள்ளார். அவர் ஏற்கனவே தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் ஆதிக்கச் சாதி மாணவர்களுக்கும் தனித்தனியாக இடம்ஒதுக்கிப் பாடம் சொல்லிக்கொடுத்ததை மாற்றி ஒன்றாக அமரவைத்துப் பாடம் சொல்லித் தந்துள்ளார். அதனால் தலைமையாசிரியர் மீதும் ஆதிக்கச்சாதியினருக்குக் கடுங்கோபம். போதாக்குறைக்கு தாழ்த்தப்பட்ட பெண்வேறு சமைத்துப்போட வந்துவிட்டதால் தாங்கள் இவ்வளவு நாள் கட்டிக்காத்த சாதிப்பெருமைகள் வீணாகிவிட்டதே என்று தங்கள் குழந்தைகளைப் பள்ளியைவிட்டு நிறுத்திக்கொண்டிருக்கின்றனர்.*

*இவ்வளவுக்கும் அவர்கள் பெரிய பணக்காரர் களும் இல்லை. சத்துணவுக்கூடத்தில் எந்த பணக்காரவீட்டுக்குழந்தை சாப்பிடுகிறது? கூலித் தொழிலாளிகளின் குழந்தைகள்தான். அடுத்த வேலை கஞ்சிக்கு இல்லாவிட்டாலும் தாழ்வில்லை. வெறியாட்டம் போட சாதிப்பெருமை இருக்கிறதே!*

*உழைக்கும் மக்களை ஒன்றுதிரட்டுவதற்கு சாதிவெறி எவ்வளவு பெரிய தடையாக இருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்று.*

*கல்யாணியை வேறு ஊருக்கு மாற்றிவிட ஆதிக்கச் சாதியினர் எடுத்த முயற்சிகளை ஆதித்தமிழர் பேரவையும் மற்ற தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளும் தடுத்து நிறுத்திப் போராடி வருகின்றனர்.*



படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழம் : போர் நிறுத்தத்தின் மகிழ்ச்சியும் எச்சரிக்கையின் தேவையும்

கடந்த பிப்ரவரி 22–ஆம் நாள் சிங்கள இனவெறி அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. பொதுப்படையாக இந்நிகழ்ச்சி பெரிய அளவில் மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது.

ஏறத்தாழ இருபத்தைந்து, முப்பது ஆண்டு காலமாகப் போர்க்களத்தின் மடியிலேயே முடங்கிக் கிடந்த மக்கள் சற்று மூச்சு விடுகிற நிலைக்கு உள்ளாகிறார்கள்.

இந்தப் போர் நிறுத்தத்தை இன்றைக்கு நார்வே தூதுக்குழுவின் முன்னிலையில் செய்து கொண்டதற்குச் சிங்கள இனவெறி அரசுக்கு ஏற்பட்ட நெருக்கடியே காரணம்.

கடந்த இருபத்தைந்து முப்பதாண்டு காலக் கொரில்லா பயிற்சிப் போரின் பட்டறிவால் செழுமையாக வளர்ந்திருக்கிற விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வலுவைத் தொடர்ந்து தாங்க முடியாத நிலையிலேயே சிங்கள அரசு இந்த ஒய்வை ஒப்புக்கொண்டது.

மேலும் தொடர்ந்த போரின் விளைவில் சிங்கள அரசிற்கு ஏற்பட்டிருக்கிற பொருளியல் நெருக்கடி மிக மிக அதிகமாகிப்போனது.

நாட்டின் வருமானத்தின் பெரும்பகுதி படைத்துறைக்கே செலவழிக்கப்பட்டதால் தொழில் வளர்ச்சிக்கோ பிறநலத்திட்டங்களுக்கோ சிங்கள அரசு கைவிரித்து மூளியாகவே நின்றது.

இப்படியான சூழலில் வெளிநாடுகளின் உதவி என்பதும், உலகவங்கியின் கடன் என்பதும் சிங்கள அரசுக்குக் கிடைக்க வாய்ப்பில்லாமல் போனது.

கடன்கள் பெறவேண்டுமானால், போருக்கான அதிகப்படிச் செலவழிப்புகள் நிறுத்தப்பட வேண்டும் என்கிற கட்டாயம் சிங்கள அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. பொருளியல் நெருக்கடியால் ஏற்பட்டிருக்கிற வேலைவாய்ப்பின்மை சமூகச் சீர்கேடுகள் நீக்கப்படவேண்டும் என்கிற தீர்வை உலக வணிக வலைப் பின்னலில் இணைவதன் வழிதான் சரிசெய்து கொள்ளமுடியும் என்பதாகச் சிங்கள அரசு கருதுகிறது. எனவே இந்த அமைதிக்குச் சிங்கள அரசு கட்டாயமாகத் தள்ளப்படுகிறது.

எனவே, இந்தப் போர் நிறுத்தத்தால் சிங்கள அரசுக்கு இந்தவகைத் தேவை இருக்கிறது எனில் வல்லரசுகளுக்கும் அதன் அடிவருடிகளுக்கும் மிகப்பெரும் தேவைகள் இருக்கின்றன.

சிங்களத்தைச் சேர்ந்த பெரும் வணிகர்கள் பலரும் இந்த ஒப்பந்தத்தைப் பெரிதும் வரவேற்றதிலிருந்து பன்னாட்டு வணிகத்தை பொருள் முதலீட்டை உருவாக்க அவர்கள் முனைவது வெளிப்படையாகிறது.

கடந்த சந்திரிகா அரசு செய்த படைத்துறைச் செயற்பாடுகள் நாட்டைச் சீர்குலைத்ததுடன், வணிகத்திலும் –உலகத்தொடர்புகளிலும், மக்கள் மேம்பாட்டிலும் எந்த வழித்த த்தையும் காணவில்லை என்பதாக ரணில் தலைமை அரசு இந்த நிலையை முன்னெடுக்கிறது.

எனவே இத்தகு நிலைக்குப் பெரும் வரவேற்பு கிடைத்திருக்கிறது.

தமிழீழ மக்களிடம் ஒரு நிம்மதிப் பெருமூச்சு கிடைத்ததும், விடுதலைப்புலிகளுக்குப் போருக்கு இடைப்பட்ட ஓய்வும் கிடைத்திருக்கிறது என்கிற வகையிலும் நமக்கும் இதன்மூலம் மகிழ்ச்சி உண்டு.

ஆனாலும் இது நிலையான தீர்வும் இல்லை, சரியான தீர்வும் இல்லை. சிங்கள அரசுக்கு இருக்கக்கூடிய பொருளியல் நெருக்கடி சரிசெய்யப்பட்டு, பொருளியல் வழியில் வெளிநாட்டுப் பொருள், மூலப் பணங்கள் வந்து குவியத் தொடங்கிவிட்டால் இலங்கை மற்றும் தமிழீழப் பகுதியின் சமூக வாழ்வு முறையே திட்டமிட்டு மாற்றப்படும் நெருக்கடியும் இதில் உண்டு.

இன்றைக்கு வெளிநாட்டுச் சந்தைக்கும், இந்தியப் பார்ப்பனிய வெறிக்கும் ஆட்பட்டுக் குலைந்தபோயிருக்கிற தமிழகத் தேசிய முதலாளிகளுக்கான நெருக்கடி, பொருளியல் வளர்ச்சியில்லா நெருக்கடி போல தமிழீழத்திற்கும் ஏற்படுகிற சூழல் வரலாம்.

வல்லரசு இல்லாமல் வாழ்க்கை இல்லை என்பதற்கான ஒரு நிலையை மக்களிடையே தோற்றுவிக்கலாம்.

இவையெல்லாம் தமிழீழ விடுதலைக்கான சூழலை மிக அதிகமாகப் பின்னுக்குத் தள்ளிவிடலாம்.

அதிகப்படியான நெருக்கடிகளையும் கொடுக்கலாம்.

எனவே இதை உணர்வதற்கான கடமை தமிழீழ மக்களுக்குப் பெரிதும் உள்ளது.தமிழீழ மக்களின் விடுதலைக்கான போராளி இயக்கமாகச் செயற்படும் விடுதலைப்புலிகள் இயக்கம் பெரும் மக்கள் திரள் நிலையிலும் நுழைந்துள்ள சூழலில், தமிழீழத் தேசிய தொழில் பெருக்கத்தையும் உருவாக்க வேண்டிய அடித்தளத்தை அதிகப்படியான நிலையில் தொடர்வதே நல்லது.

உலக வணிக வலைப்பின்னலிலும் வல்லரசிய பொருள் மூலதன நெருக்கடியிலும் வீழத் திட்டமிடுகிற சிங்கள அரசின் இப்போர் நிறுத்த ஒப்பந்தத்தை விடுதலைப்புலிகள் இயக்கம் திட்டப்பட்டு வீழ்த்தி தமிழீழ விடுதலையை உறுதிப்படுத்துகிற நீண்ட காலநோக்கில் செயல்பட வாழ்த்துகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# ஆண்டிப்பட்டி வழங்கிடும் அரசாட்சி பின் விளைவுகள் பயங்கரவாதம் மிகுந்தவை...

**செல்வமணியன்**

அண்மையில் நடந்து முடிந்துள்ள ஆண்டிப் பட்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் பல்வேறு அதிகாரத்துவ தில்லுமுல்லு நாடகங்களை அரங் கேற்றி, தம்முன் எதிர்நின்ற அனைவரையும் திக்குமுக்காடச் செய்து, மீண்டும் தமிழகத்தின் முதல்வராகி இருக்கிறார், அ.இ.அ.தி.மு.க. தலைவி செயலலிதா!

ஆண்டிப்பட்டி இடைத்தேர்தலின் உண் மையான பின்னணிதான் என்ன? பல்வேறு மக்கள் விரோத ஊழல் வழக்கு களில் சிக்கி நிற்கும் செயலலிதா, அவற்றின் மூலம் ஒரு தண்டனைக் குற்றவாளியாகவும் இருப்பதால், தேர்தலில் போட்டியிட முடியாது என முதலில் உருவாகிய சூழலும், பின் அவர் போட்டியிடாமல் முதலமைச்சர் பதவியில் அமர்ந்த நிலையில் அவர் முதலமைச்சர் பதவியில் நீடிக்கக் கூடாது எனப் பதவியிறக்கம் செய்யப் பட்ட இரண்டாவது சூழ லுமே, ஆண்டிப்பட்டித் தேர்தலின் உண்மையான பின்னணிகள்!

> தாழ்த்தப்பட்டோரின் நலம், தமிழர் நலம் ஆகியவை குறித்துச் சிந்திப்போர் ஒன்று சேரவேண்டும். ஆண்டிப்பட்டி வெற்றியின் பின்னால் எழுந்துநிற்கும் அரசு பயங்கரவாதத்தை அடியோடு வீழ்த்த தாழ்த்தப்பட்ட மக்களின் அரசியல் உரிமைகளை முன்னிறுத்திக் கல்வி, தொழில், வேலை வாய்ப்பு, அதிகாரம், ஆட்சி என விரியும் அனைத்துத் தளங்களிலும் போராட்டங்களை முன்னுக்குக் கொண்டுச் செல்ல வேண்டும். மக்களுக்கான சனநாயகத்தைக் கோர வேண்டும்.

இந்தப் பதவியிறக் கப் பின்னணியோடுதான் கடந்த அய்ந்து மாத காலமாக பன்னீர்ச்செல்வத்தின் தலைமையில் ஒரு பொம்மை அமைச்சரவை தமிழகத்தை ஆள்வதாகக் காட்டப்பட்டு வந்தது. ஆனால் அதனைப் பின்னிருந்து இயக்குபவராக - திரை மறைவில் அல்லாமல் மிகவும் வெளிப்படையாகவே - செயலலிதா செயல்பட்டும் வந்தார். இந்தப் பின்னணி ஆட்சி இப்போது முடிவுக்கு வந்துவிட்டது.

ஆம்! தேர்தல் ஆணையத்தின் தெளிவான காய் நகர்த்தல்கள் மூலம் ஆண்டிப்பட்டி இடைத்தேர்தல் வெற்றியைத் தனது 54வது பிறந்தநாள் வாழ்த்தாகப் பெற்றுக்கொண்ட செயலலிதா, இப்போது தமிழகத்தின் நேரடி முதலமைச்சர் ஆகிவிட்டார். பொம்மை முதலமைச்சராய்க் காட்டப்பட்டு வந்த பன்னீர்ச்செல்வம் பொதுப்பணித்துறை அமைச்சராகி விட்டார். தலையாட்டி- தலைமறைவு காட்சிகள் முடிந்துவிட்டன.

**பதவியேற்பு காட்சிகள் :**
**அதிகார வெறி மிகுந்தவை**

முன்பு சட்டமன்றப் பொதுத் தேர்தலின் போது நான்கு தொகுதிகளில் வேட்பாளராக விண்ணப் பித்தும் போட்டியிட முடியாமல் தடுக்கப்பெற்ற செயலலிதா, அத்தேர்தலில் தன் கட்சி பெற்ற வெற்றியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அதன் தலைவி என்ற பெயரில் ஆட்சிய திகாரம் பெற்ற முறை மிகவும் அவசரத்தன்மை கூடியதும் ஆனால் எளிமையானதும் ஆகும்.

அதே நேரத்தில் அவர் ஆட்சியதிகாரம் பெற்ற போக்கு அரசியல் சட்ட நடைமுறைவிதிகளை மீறியதுமாகும். அதற்காகவே தமிழகத்தின் முந்தைய ஆளுநர் (தமிழக ஆட்சிப் பொறுப்பின் முழுமைக்கும் உரிமையுடையவர்) பாத்திமா பீபி பெருங்குற்றச் சாட்டு களுக்கு உள்ளாக்கப்பட்டார். பின் அவராகவே பதவி விலகிக் கொண்டார்.

எனவே அப் பதவியேற்பு நிகழ்ச்சி வெறும் நிகழ்ச்சியல்ல! தமிழகஆட்சி முறையின் மைய அதிகாரத்தையே கேள்விக்குள்ளாக்கி ஆட்டிப்பார்த்த நிகழ்ச்சி அது! ஆனால் இப்போதைய பதவியேற்பு அப்படிப்பட்டதல்ல! அது வெற்றிப் பெருக்கின் மகிழ்ச்சி! அங்கீகாரம் பெற்ற அதிகார வெறியின் அரங்கேற்றம்! எனவேதான் அது பெரும்பகட்டோடு பின்வருமாறு அரங்கேறியது.



படிப்பகம்

www.padippakam.com

செயலலிதாவின் அந்தப்புர உப்பரிகையைப் போயசு தோட்டம் தொடங்கி பதவியேற்வு மண்டப மாக்கப் பட்டிருந்த சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபம் வரை சாலை நெடுக ஆயிரக்கணக்கான வாழை மரங்களைக் கொன்று நடப்பட்டிருந்த வாழைப்பந்தர்கள்! இரு பக்க பச்சை வரவேற்பு வளைவுகள்! பூப்பந்தல் புனைவுகள்! வெளிச்சம் மின்னலிடக் கண்கூசும் விளக்கு அணி வகுப்புகள்! கைதூக்கி முழக்கமிடக் கொண்டு வந்து குவிக்கப்பட்டிருந்த மக்கள் கூட்டம்!

இவற்றுக்கிடையேதான் வெற்றிச்சிரிப்போடு அங்கீகாரம் பெற்ற ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் எனும் தகுதியோடு மீண்டும் முதலமைச்சர் பதவியை அமளி துமளிகளுடன் அடைந்திருக்கிறார் செயலலிதா!

ஒருபுறம் தமிழ்நாடு பொருளாதார நிதி நெருக்கடியில் சிக்கித் தத்தளிப்பதாக நாள்தோறும் செய்தித் தாள்களில் அனைத்து அமைச்சர்களும் நீட்டி முழக்கம்! மறுபுறம் ஒரு பதவியேற்பு நிகழ்ச்சிக்கே முன்னர் மேற்கொண்ட முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டுப் பணத்தைப் பேரளவில் கொட்டி யிறைத்துக் கும்மாளம்!

இது என்ன! கட்சி வாழ்க்கை அரசியலின் முரண்பாடா? இல்லை. அதிகார வெறி அங்கீகாரத்தோடு அரங்குக்கு வரும் நிகழ்வின் பதிவு! வெறித்தனம் வீரம் பேசும் விளையாட்டு!

**தமிழ்நாட்டின் உண்மை நிலைதான் என்ன?**

உலகம் முழுவதி லும் தலைவிரித்தாடிய படி உலகமயமாக்கம், தாராளமயமாக்கம்,தனியார் மயமாக்கம் எனப்பல்வேறு ஆக்கங்கள் வடிவில் சிவருத்ர தாண்டவம் ஆடி வருகின்றது. வல்லரசிய முதலாளியத்தின் வெறியாட்டம்!

அத்தனை ஆக்கங்களாலும் உலகம் முழுவதிலும் அழிக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் வருகின்றன. அடிப்படை மக்களின் வாழ்க்கையும் அவர் தம் உரிமைகளும் !

இப்படி அரங்கேறும் சிவருத்ர பாண்டிய தாண்டவத்தால் உலகமெங்கும் நொறுக்கப்பட்டு வருகின்றது, ஒவ்வொரு நாட்டினுடைய பொருளாதார அடிப்படைகளும், அவை மேற்கொள்ளும் ஆட்சியின் அகப்புறக் கட்டுமானங்களும்! இவை ஏற்படுத்தும் விளைவுகளால் கை கழுவப்படுகின்றன, மக்கள் நலத்திட்டங்களும் பழைய செல்லரித்துப்போன இயங்குமுறை வடிவங்களும்! இதனால் பிறக்கின்றன, புதிய அதிகாரச் சட்டங்களும் நடைமுறைகளும்!

உலக மயமாக்க சிவருத்ர பாண்டிய தாண்டவத்தால் உலகமெங்கும் நொறுக்கப்பட்டு வருகின்றது, ஒவ்வொரு நாட்டினுடைய பொருளாதார அடிப்படைகளும், அவை மேற்கொள்ளும் ஆட்சியின் அகப்புறக் கட்டுமானங்களும்! இவை ஏற்படுத்தும் விளைவுகளால் கை கழுவப்படுகின்றன, மக்கள் நலத்திட்டங்களும் பழைய செல்லரித்துப்போன இயங்குமுறை வடிவங்களும்! இதனால் பிறக்கின்றன, புதிய அதிகாரச் சட்டங்களும் நடைமுறைகளும்!

இத்தகு எதிர்போக்குகளால் எழுச்சியுறும் மக்களை அடக்கப் பழைய வழிகளில் அல்லாமல் நேரடியாகவே அதிகார வெறியையும், வெளிப் படையாகவே ஆயுத வெறியையும் தூக்கிக்கொண்டு, அடங்கிக்கிடந்த மக்களை மேலும் மேலும் அடங்கச் சொல்லிப் புதுப்புதுச்சட்டங்கள் மூலமும் நடைமுறைகள் மூலமும் அடக்க முற்படுகின்றன அதிகார வெறி அரசுகள்!

இத்தகு போக்கில் இணைந்து நிற்பவைதான் இன்றைய இந்திய அரசும் அதன் உள் கட்டுமான அரசாக இருக்கின்ற தமிழ் மாநிலஅரசும்! இந்தியத் தலைமையமைச்சர் இந்து மதவெறியைக் கையில் தூக்கிப் பிடித்துக் கொண்டு அமெரிக்காவின் சிறந்த அடிவருடியாகித் தொண்டு புரிகிறார். இங்கு இந்தியத் துணைக் கண்ட மக்களை ஒடுக்க 'பொட்டோ' (Poto) வைக் கொண்டு வருகிறார். தமிழ் மாநில செயலலிதாவோ இந்திய அரசியலமைப்பின் அடிப்படைகளையே கேலிக்கூத்தாக்குகிறார். அவற்றின் பழைய அடிப் படைகளைத் தகர்ப்பதில் அதிகார வெறியோடு முன்னுக்கு வருகிறார். அதிகார வகுப்பைப் புதிய அடிப்படைகளில் தயாரித்து வருகிறார்.

ஆக், உலக வல்லரசியத்தின் வேறுபட்ட பன்முக ஒடுக்குமுறைகள் ஒன்று கூடி காட்-டங்கல்-போட்டி - போர் - கொள்ளை-குப்பை-எரிப்பு-அழிப்பு-அரசு பயங்கரவாதம் என உலகம் முழுவதிலும் நடைபெற்று வரும் அழித்தொழிப்பின் ஒரு பகுதியாகவே, அவற்றின் நீட்சியாகவே



படிப்பகம்

அழிக்கப்பட்டு வருகின்றது, இன்றைய தமிழ் மக்களின் வாழ்க்கை!

www.padippakam.com

இப்போக்கின் அப்பட்டமான வெளிப்பாடு தான் கடந்த அய்ந்து மாத பன்னீர்ச்செல்வத்தின் ஆட்சியின் போது முன்னுக்கு வந்த போக்குவரத்து, மின்சாரத்துறை மற்றும் அரசு ஊழியர்கள் போன்ற பல்தளத் தொழிலாளர்களுக்குக் கடந்த காலங்களில் வழங்கப்பெற்று வந்த பொருளியல் (போனசு) உரிமைகள் தொடர்ந்து வழங்கப்பட முடியாத இக்கட்டு நிலை! மறுக்கப்பட்ட நிலை!

மேலும் அடிக்கடி தொடர்போக்கில் ஏற்றப்பட்டு வரும் விலைவாசி உயர்வுகள்; விரிவாக்கப்பட்டு வரும் வரிவிதிப்பு மற்றும் வசூலிப்பு நடைமுறைகள்; பலவேறு வழிகளிலும் பொருளாதார இழப்புக்குக் கட்டாயப்படுத்தப்படும் மக்கள் வாழ்க்கை; ஆட் குறைப்பு - இயந்திரமயமாக்கம் என வெளியேற்றப்படும் தொழிலாளர்கள்; புதிய அரசியல் மற்றும் உற்பத்திக் கட்டுமானங்களுக்காக உழவு வாழ்க்கையிலிருந்து அகற்றப்பட்டு நாடோடிகளாக் கப்படும் உழவுக் கூலித் தொழிலாளர்கள்; ஒவ்வொரு நாளும் பெரு நகரங்களை நோக்கி வேலை தேடிப் புறப்பட்டு வரும் குடும்ப இடப்பெயர்வுகள்; எங்கெங்கும் பட்டினிச்சாவையும் கடன் தொல்லையையும் நோக்கித் தள்ளப்படும் அடிப்படை மக்கள்; கல்வியும் வேலை வாய்ப்பும் இழந்து நிற்கும் எதிர்காலத் தளிர்கள்.

இதுதான் தமிழக மக்களின் உண்மையான வாழ்க்கை. கருணாநிதி செயலலிதா கட்சிச் சண்டையில் மறைக்கப்பட்டுப் பாதுகாக்கப்படும் அரசு பயங்கரவாதத்தின் ஆட்சி முறை வாழ்க்கை.

இந்தப் பின்னணியோடுதான் ஆண்டிப்பட்டியின் வெற்றி அரசு பயங்கரவாத வெறியோடு முன்னுக்கு வந்துள்ளது. வெளிவந்த கையோடு தாழ்த்தப்பட்டோரின் கல்வியுரிமையைப் பறித்தெடுக்கக் கிளம்பியுள்ளது..

> 'உலக வல்லரசியத்தின் வேறுபட்ட பன்முக ஒடுக்குமுறைகள் ஒன்று கூடி காட்டங்கல்- போட்டி - போர் - கொள்ளை- குப்பை-எரிப்பு-அழிப்பு-அரசுபயங்கர வாதம் என உலகம் முழுவதிலும் நடைபெற்று வரும் அழித்தொழிப்பின் ஒரு பகுதியாகவே, அவற்றின் நீட்சியாகவே அழிக்கப்பட்டு வருகின்றது, இன்றைய தமிழ் மக்களின் வாழ்க்கை!

## கல்வியில் கை வைக்கிறார், ஆண்டிப்பட்டி அம்மா!

முன்னர்க் கடந்த அய்ந்து மாத ஆட்சியின் போது கல்வித்துறையில் ஏற்படும் வேலைவாய்ப்பற்ற போட்டியைக் கட்டுக்குள் கொண்டு வர பன்னீர்ச் செல்வம் அமைச்சரவை அய்ந்தாம் வகுப்பு முதல் பொதுத்தேர்வு என மக்களின் கல்வியுரிமையின் அடிமடியில் கைவைத்தது. பின்னர் எதிர்ப்புகளின் காரணமாக அதனைப் பின்வாங்கியும் கொண்டது. இது எல்லோரும் அறிந்த ஒன்று.

ஆனால் இப்போது நேரடிப் பொறுப்பேற்றுள்ள செயலலிதா நயவஞ்சகமாக அதனைப் புறவழிகளில் கொண்டு வர முற்பட்டுள்ளார். அதற்கு முன்னேற்பாடாக எதிர்ப்பில் வலுவற்றுக் கிடக்கும் தாழ்த்தப்பட்டோரின் கல்வி உரிமையில் கை வைத்திருக்கின்றார்.

ஆம்! தமிழக அரசின் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் பள்ளிகளையும் விடுதிகளையும் கல்வித்துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்து பின்னர் அவற்றைத் தொண்டு நிறுவனங்களிடம் தனியார் மயமாக்குவதே அவரின் குறிக்கோள்.

இது குறித்து தாழ்த்தப்பட்டோரின் நலம், தமிழர் நலம் ஆகியவை குறித்துச் சிந்திப்போர் ஒன்றுசேர வேண்டும். ஆண்டிப்பட்டி வெற்றியின் பின்னால் எழுந்துநிற்கும் அரசு பயங்கர வாதத்தை அடியோடு வீழ்த்த தாழ்த்தப்பட்ட மக்களின் அரசியல் உரிமைகளை முன்னிறுத்திக் கல்வி, தொழில், வேலை வாய்ப்பு, அதிகாரம், ஆட்சி என விரியும் அனைத்துத் தளங்களிலும் போராட்டங்களை முன்னுக்குக் கொண்டுச் செல்ல வேண்டும். மக்களுக்கான சனநாயகத்தைக் கோர வேண்டும்.

இல்லையேல் தாழ்த்தப்பட்டோர் உரிமை மட்டுமல்ல, தமிழர் உரிமையும் பறிபோகும்! தமிழ்நாடு வல்லரசியத்துக்கும் அதன் வலைப்பின்னலுக்குள்ளும் இறுக்கப்பட்டுச் சாகும்!

எழும் அரசு பயங்கரவாதத்தை மக்கள் ஒற்றுமை, மக்கள் போராட்டம், மக்கள் சனநாயகம், மக்கள் அதிகாரம் ஆகியவற்றின் ஒன்றிணைவே முறியடிக்கும். ●



படிப்பகம்

www.padippakam.com

# தமிழும் வேண்டும் இந்தியாவும் வேண்டும்

# மீசைக்கும் ஆசை! பூணூலுக்கும் ஆசையா?

"தமிழில் பாடு.. இல்லையேல்... பாடவைப்போம்!" என்கிற புதிய முழக்கத்தோடு இவ்வாண்டு நடந்து முடிந்திருக்கிறது ம.க.இ.க. வினரின் தமிழ் மக்கள் இசைவிழா!

தமிழில் பாடு இல்லையேல் நாட்டைவிட்டு ஓடு–என இந்தியா முழுமைக்கும் தமிழில் பாடு என்னும் பொருள்பட (நாடு என்றாலே அவர்களுக்கு இந்தியாதான்) நீட்டி முழங்கியவர்கள் நாம் திறனாய்வு செய்து எழுதியவுடன் இல்லை! இல்லை! நாங்கள் தமிழ்நாட்டை விட்டுத்தான் ஒடச்சொன்னோம் என்று குட்டிக்கரணம்போட்டு ''தமிழில் பாடு இல்லையேல் தமிழ்நாட்டை ஓடு'' என்று தமிழ்நாட்டுக்கு மட்டுமான முழக்கமாகக் குரலைத்தாழ்த்தி முழங்கினார்கள்.

இந்தியப் பாட்டாளிகளுக்கென ஓர் இயக்கம் நடத்துகிறவர்கள் நீங்கள். தமிழ்நாட்டில் தமிழில்பாடு என்றால் தெலுங்கு நாட்டில் தெலுங்கில் பாடு இல்லையேல் ஓடு என்றும் கன்னட நாட்டில் "கன்னடத்தில் பாடு இல்லையேல் ஓடு'' என்றும் அங்குள்ள தமிழ் இனத்தவர்களையும் மற்ற இனத்தவர்களையும் ஓடச்சொல்லி முழக்கமிடுவீர்களா? என்று எழுதினோம். அப்படி யென்றால் நீங்கள் காணும் இந்தியப் புரட்சி வெறும் காணல் நீராகிவிடாதா? அத்தகைய முழக்கத்தின் வழி பாரதநாடு பழம்பெரும் நாடு என்றும், இது ஒரு நெடிய கலாச்சாரத்தைக் கொண்டது, புகழ்மிக்கப் பண்பாட்டைக் கொண்டது என்றும் (ஆர்.எஸ்.எஸ்–ம் இப்படித்தான் சொல்கிறது) பாரதப்பாட்டாளிகளைத் திரட்டுவதாகச் சொல்லிக்கொண்டு தமிழ்நாட்டு மக்களை தெலுங்கின மக்களோடு மோதும்படியான ஒரு முழக்கத்தை எழுப்புகிறீர்களே அப்போக்கு சந்தர்ப்பமாகத் தெரிய வில்லையா? என்றோம்.

அவ்வமைப்புத் தோழர்கள் பலரிடம் பல்வேறு இடங்களில் இதுபற்றிக் கேட்டோம். கேள்வியில் இருக்கும் நியாயத்தை உணர்ந்த அவர்கள் அமைப்பில் கேட்டுச் சொல்கிறோம் என்று போனார்கள். அவர்களில் ஒருசிலர் திரும்ப நம்மிடம் பேசவே இல்லை. ஒருசிலர் மட்டும் உங்களுக்குச் சொல்ல எங்களுக்கு நேரமில்லை என்றார்கள். வேறு சிலர் நாங்கள் மாபெரும் அமைப்பு உங்களைப்போன்ற சிறிய அமைப்பினர் எழுப்பும் கேள்விகளுக்கெல்லாம் விடை சொல்ல முடியாது என்றும் சொல்லிவிட்டார்கள்.

சி.பி.எம் போன்ற கட்சிகளை (ம.க.இ.க–வை விட)ப் பெரிய எண்ணிக்கையில் இவர்கள் திறனாய்வு செய்யும்போது அவர்கள் உதிர்க்கும்சொற்களும் இப்படித்தானே இருக்கும்.

கேள்விகளுக்கு விடைசொல்லாமல் அமைதி காத்தவர்கள் இந்த ஆண்டு தமிழ்மக்கள் இசைவிழாவில் "தமிழில்பாடு இல்லையேல் பாடவைப்போம்....." என்று சுவர்களில் எழுதி வைத்திருக்கிறார்கள்! அடடா என்ன புரட்சிகர நேர்மை இது! நேரில் கேள்வி எழுப்பினோம். இதழ்களில் திறனாய்வு செய்து எழுதினோம். எந்த விடையும் இல்லை. இந்த ஆண்டு முழக்கத்தில் நாட்டைப் பற்றி எந்த பேச்சும் இல்லை! நாடு என்று முழக்கமிட்டால்தானே எதுநாடு? –எப்படி அது நாடு? என்று எதிர்க்கேள்வி கேட்டு குரல்வளையைப் பிடிக்கிறார்கள். நாடு என்று சொல்லையே எடுத்துவிட்டால் என்ன என்று மாற்றிக்கொண்டுவிட்டார்கள்.

தமிழில் பாட வேண்டும் என்பதே சரி என்ற போதும், தமிழில் பாடப்படுகிற நாடு –என்பதை இந்தியா என்கிற பூணூலை மாட்டிக்கொண்டு தமிழில் பாட வேண்டும் என்பது நமக்கு முரணாகவே தெரிகிறது.

இவர்களுக்கு உண்மையிலேயே தமிழில் பாடவைக்கவேண்டும் என்பதில் அக்கறை இருக்குமானால் இவர்களுக்கு இந்தியா எதற்கு? "தமிழில் பாடு.. இல்லையேல் பாடவைப்போம்'' என்கிற முழக்கம் ம.க.இ.கவின் அடிப்படைத்தளமான இந்தியாவுக்கு எப்படிப் பொருந்தும்?

இந்தியா ஒரு தேசம் இல்லை. இந்தியா ஒரு நாடுமல்ல அது ஓர் அரசு. வெள்ளைக்காரன் பல்வேறு இன மக்களை வெற்றி கொண்டபோது ஒவ்வொரு இனமக்களும் தங்களுக்கென்று தனித்தனி மொழி, பண்பாடு, வரலாறு, அரசியல், பொருளியல், வழக்கங்களைக் கொண்டிருந்தனர். அவர்களை யெல்லாம் அடக்கி ஒடுக்கித் தன் ஆட்சியை விரிவுசெய்து பரப்பி அப்பகுதிகளையெல்லாம் ஒற்றை அரசாக உருவாக்க எண்ணினான். அந்த வகையில் இந்தியா என்ற செயற்கை அரசை உருவாக்கினான். அதுவரை பல்வேறு நிலவுடைமை அரசுகளை ஆட்டிப்படைத்து வந்த ஆரியத்துக்கு இது பெரும்வாய்ப்பாக அமைந்தது. எனவே ஆங்கிலேயனின் முயற்சிக்கு உறுதுணையாக இருந்தனர். சாதியச் சமூகத்தை ஆரியப் பூணூல் கட்டி இறுக்கி வைத்திருந்த அவர்கள் இந்திய அரசையும் ஆரியப் பூணூலால் கட்டி வைத்தனர். சமூகத்தில் சாதியத்தின் வழி ஆளுமை செய்யும் பார்ப்பனியம் அரசியலில் இந்தியமாகப் படிநிலை வளர்ச்சி பெற்று நிற்கிறது.

இன்று இந்தியம் என்று எதை எடுத்தாலும் அது பார்ப்பனியப் பூணூலுக்குள் சிக்கிக் கொண்டதாகவே இருக்கிறது. ஆக இந்தியக் கட்டமைப்பு என்பது பார்ப்பனியக் கட்டமைப்பாகவே இறுக்கம் பெற்றிருக்கிறது.

இந்தியப் பார்ப்பனியத்தின் ஒடுக்குமுறைக்குள் எவ்வளவு நாள்தான் சிக்குண்டு தவிப்பது. பல்வேறு இனமக்களும் தனித்தனி தேசியஇனங்களாக வளர்ச்சி பெற்றுள்ளனர். வளர்ச்சி பெற்ற தேசிய இனங்கள் ஒவ்வொன்றும் தங்கள் தேசிய இன உரிமைகளுக்காகப் போராடுகின்றன. அவர்களுக்குத் தங்கள் எதிரி இந்தியாதான்; இந்தியக் கட்டமைப்புதான் தங்கள் குரல்வளையை இறுக்குகிறது, என்பதை உணர்ந்து போராடும் காலம் இது.



படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் ம.க.இ.க.-வினரின் சனநாயகமா?

தமிழ்மக்கள் இசைவிழாவில் “ ம.க.இக. தோழர்களே... உங்களிடம்” என்னும் தலைப்பிலான த.ஓ்.வி.இ.யின் வெளியீடு விற்கப்பட்டது. நூல்களோடு நூலாக அவ் வெளியீட்டையும் போட்டு விற்றுக்கொண்டிருந்தோம். கடந்த மக்கள் தமிழகம் இதழ்களில் பலமுறை ம.க.இ.க.வின் அரசியல் குழப்பங்களைத் திறனாய்ந்து எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பே அவ்வெளியீடு. காலையில் விற்றுக்கொண்டிருந்த தோழர்களை ம.க.இ.க. தோழர்கள் வந்து சூழ்ந்து கொண்டு இங்கே விற்கக் கூடாது என்று மறுத்தனர். நமது தோழர்கள் ஏன் விற்கக் கூடாது எனக்கேட்டதற்கு அதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாது; எங்கள் இடத்தில் வந்து எங்களையே விமர்சனம் செய்கிறீர்களா? வந்து எங்கள் விழா பொறுப்பாளரிடம் பேசுங்கள் என்று தோழர் சீனிவாசனிடம் அழைத்துச் சென்றனர். அவரோ, “நாங்க ஐந்தாறு இலட்சம் செலவு செஞ்சு கூட்டம் கூட்டுவோம். நீங்க வந்து உங்கள் கருத்தைச்சொல்லிவிட்டுப் போவீர்களா?" என் வேகமாகக் கேட்டார். மேலும், “எங்களுடன் வண்டியில் வேற வந்துவிட்டு எங்களையே விமர்சனம் செய்கிறீர்களா? புத்தகத்தை அள்ளிக்கொண்டு வெளியிலே போய்விடுங்கள்” என்று மிரட்டலாகவே பேசினார்கள்.

நாம் தொடர்ந்து விற்றுக் கொண்டிருந்தோம். மறுபடியும் வந்தார்கள். ஒருவர் கடகடவென புத்தகங்களை அள்ளினார். “இங்கே விற்கக்கூடாது என்று சொன்னால் கேட்க மாட்டீங்களா? என்று சத்தம் போட்டனர். நாமும் தோழரே இந்த விழாவில் மனு தர்மம் நூல் விற்கப்படுகிறது. தொண்டு நிறுவனங்கள் தனியாகக் கடையே போட்டு விற்கிறார்கள். அதற்கெல்லாம் விற்பதற்கு இசைவு கொடுத்துவிட்டு இந்த வெளியீடுகளை விற்கக்கூடாது என்று தடைவிதிக்கிறீர்களே இதுதான் உங்களின் புதிய சனநாயக நடைமுறையா? என்று கேள்வி எழுப்பினோம். அதற்கெல்லாம் பதில்சொல்ல முடியாது நாங்கள் போய் தொண்டர் படையை அழைத்து வந்து உங்களை கட்டாயப்படுத்தி(ஃபோர்ஸ்பண்ணி) அனுப்புகிறோம். என்று சொல்லிவிட்டு ஒட்டுப்பொறுக்கிக் கட்சிகளைப்போல் தொண்டர்படையை அழைத்து வரப்போனார்கள். போனவர்கள் திரும்பவில்லை.

காரணம் இந்த நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்த தோழர்கள் பலரும் அவர்களுடைய போக்கை எதிர்த்துப் பேசத் தொடங்கிவிட்டனர். ம.க.இ.க. தோழர்கள் பலரும் கூட நீங்க எழுதியிருக்கிறது சரிதாங்க. அதற்கு பதில் சொல்லுவதை விட்டு விட்டு விற்கக் கூடாதுன்னு சொல்றது என்னங்க நியாயம் என்று அவர்களின் போக்கைக் கண்டிக்கத் தொடங்கிவிட்டனர். அவர்கள் செய்த அரட்டலால் கொண்டு போயிருந்த வெளியீடுகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்தன.

உலக வல்லரசியங்கள் அனைத்தும் இந்தியாவில் அடைபட்டுக் கிடக்கும் பல்வேறு தேசிய இனமக்களைச் சுரண்ட வேண்டும் என்று சொன்னால் இந்த இந்தியக் கட்டமைப்பு உடையாமல் இருக்கவேண்டும். உலகம் முழுமைக்கும் அந்தந்த தேசிய இனமக்கள் அவரவர் தேசிய இனங்களின் உரிமைப்போராட்டங்கள் வழியாகவே வல்லரசியங்களை எதிர்க்கின்றனர். அதனாலேயே அண்மையில் ஆப்கன் போருக்குப் பிறகு அனைத்து தேசிய இன விடுதலை இயக்கங்களையும் அமெரிக்கா தடைசெய்து உள்ளது.

ஆக மொழி வழியிலும் சாதியச் சமூக வழியிலும் நம்மை ஒடுக்கிப் பொருளாதார வழியில் சுரண்டுவதற்கு ஆரியப் பூணூலால் இறுக்கிக் கட்டப்பட்ட “இந்தியா” எப்படி பார்ப்பனியத்திற்கு தேவையோ அதுபோலவே மூலதனத்தின் மூலம் நம்மைச்சுரண்டிச் செல்ல “அதே இந்தியா” வல்லரசியத்திற்கும் தேவையானதாக இருக்கிறது.

மொழிவழியிலும், பண்பாட்டு வழியிலும், கலைவழியிலும், சாதி வழியிலும் அனைத்து வாழ்வியல் கூறுகள் வழியிலும் நாம் எதிர்க்கும் பார்ப்பனியத்தின் உயிர்நாடியும் பொருளாதார வழியில் ஒட்டச் சுரண்டும் வல்லரசியத்தின் உயிர்நாடியும் இன்றைய அரசியல் கட்டமைப்பான இந்தியத்தில் நிலை கொண்டிருக்கும் போது இந்தியக் கட்டமைப்பை வீழ்த்துவதன் மூலம்தானே பார்ப்பனியத்தையும் வல்லரசியத்தையும் வீழ்த்த முடியும்?

மாறாக செயல்தந்திர அடிப்படையில் என்று சொல்லி மொழி, பண்பாட்டு ஒடுக்குமுறைக்கு எதிராகத் தமிழ்மக்கள் இசைவிழா எடுப்பவர்கள், மூலத்தந்திரம் என்று சொல்லி மொழி, பண்பாட்டு ஒடுக்குமுறையைச் செய்யும் இந்தியக் கட்டமைப்பை கட்டிக்காக்க முயல்வது யாரை ஏமாற்ற?

செயல்தந்திரம் என்பது எப்போதும் அடிப்படை உத்திக்கு வலு சேர்ப்பதாக இருக்கவேண்டுமே தவிர எதிராக இருக்க முடியாது! ஆனால் ம.க.இ.க.வின் உத்திகளோ ஒன்றுக் கொன்று எதிரானதாக அல்லவா இருக்கிறது!

எனவே, மூச்சுக்கு முந்நூறு தடவை இந்தியா, இந்தியா என்று இந்தியப் பூணூலை உருவிக்கொள்ளுகிற இவர்களின் தமிழ்ப்பற்றினைச் சந்தர்ப்பவாதமானது என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது?

தமிழ்த்தேசத்தைச் சிந்திக்காத, தமிழ்த்தேச விடுதலையை முன்னெடுக்காத இவர்களின் தமிழ்ப்பற்று முழுக்க முழுக்கச் சந்தர்ப்பவாதமானதே.


தெளிவுபடட்டும் , தெளிவுபடுத்தட்டும் ம.க.இ.க.!



படிப்பகம்

www.padippakam.com

# மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் நூற்றாண்டு விழா



ஏடறிந்த வரலாறெல்லாம் வகுப்புப் போராட்டத்தின் வரலாறே என்று எது எதையெல்லாம் மாஸ்கோ பதிப்பகங்கள் வெளியிட்டனவோ, சீன வெளியீடுகள் எழுதினவோ, அதை மட்டும் முங்கி முங்கிப் படித்ததுதான் தமிழ்நாட்டு மார்க்சியர்களின் பெரும்பகுதி வேலையாக இருந்தது. அவற்றைக் கூட உருப்படியாக அவர்கள் விளங்கிக் கொண்டு படிக்கவில்லை.

அவர்களுக்குத் தமிழகம் தெரியாது; தமிழும் தெரியாது.

இந்தியா பழம் பெரும் வரலாற்றைக் கொண்டது என்று அதன் புழுத்துப்போன ஆரியப் புராண வரலாற்று நாற்றங்களை இவர்களும் முகர்ந்து மணந்து கொண்டவர்கள்.

தமிழ் இலக்கியங்களின் – இலக்கணங்களின் மீது தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் பூணூல் உணர்வே அவர்களிடம் மிதமிஞ்சி இருந்தது.

ஆரியர்கள் இந்த நாவலந்தீவிற்கு வருவதற்கு முன்னர் இங்கு முழுமையும் பரவி இருந்தவர்கள் தமிழிய மக்களே என்பது குறித்தோ, அவர்கள் எப்படி குமரிக்கண்டத்திலிருந்து அரப்பா, மொகஞ்சதாரோ வரை பரவி வாழ்ந்தனர் என்பது குறித்தோ எந்தவகை ஆய்வையும் அவர்கள் உணரவும் இல்லை; அதில் ஊன்றவும் இல்லை.

மொழி ஞாயிறு பாவாணர் தம்வாழ்நாள் பணியாக தமிழ் மொழி - நாட்டு வரலாற்றுக்கான மீட்புப் பணிகளைப் பல்வேறு தருக்க நிலைகளில் வெளிப்படுத்தியவர்.

அவரின் அழுத்தமான, ஆணித்தரமான முடிவுகள் பார்வை அளவில்கூட இந்திய மார்க்சியர்களால் படிக்கப்பட்டதில்லை.

அவர்கள் அவ்வகையினராக இருக்க தமிழ்த் தேசிய விடுதலைக்கான ஆர்வலர்கள், இயக்கத்தினர், பெரும்பாலானோர்க்குத் தமிழ்மொழி, இன, நாட்டு வரலாற்றறிவு குறைவு.

எனவே தமிழ் நிலத்தினின்று மார்க்சியத்தை, மக்கள் விடுதலையை விளங்கிக் கொள்கிற ஆற்றல் அவர்களிடையே இல்லாமற் போனது.

அத்தகைய தேவைகளுக்குப் பெரிதும் துணைநிற்பவர் மொழிஞாயிறு பாவாணர் அவர்கள். அவர்களின் ஆழ்ந்த அறிவுத்திறன் வழிப்பட்ட அடிப்படை தேடல்களைத் தமிழ்த் தேசிய உணர்வினர் ஒவ்வொருவரும் ஒருமுறையேனும் படிக்கவேண்டுவது கட்டாயமாகின்றது.

அவர் வழிப்பட்ட கல்வியைப் பெறுவது அவரின் நூற்றாண்டு விழாக்காலத்தில் அவரின் முயற்சிகளுக்கு நாம் செய்யும் பெரும் நன்றிக்கடனாகும்.

## இவர் தாம் பாவாணர்...!

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

பளபளப்பான கருத்த முகம்; ஒளிநிரம்பி வழியும் கூரிய விழிகள்; அகன்று ஏறிய நெற்றி; அடர்த்துச் சிலிர்க்கும் அரிமா மீசை; ஏக்கழுத்து; பீடுநடை; பெருமிதமான உடை; அறிவு தெறிக்கும் கணீரென்ற பேச்சு; குழந்தை உள்ளம் – இவற்றின் மொத்த உருவம் பாவாணர் எனில் மொழியியல் ஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் ஒருவரே!

தமிழ்மொழி ஆய்விலேயே ஐம்பதாண்டுகள் மூழ்கித் திளைத்த இப்படிப்பட்ட பேரறிஞர் ஒருவரைத் தமிழகம் இந்நாள் வரை கண்டதே இல்லை. இவர் வாயினின்று சரமாரியாக வந்து விழும் தனித்தமிழ் ஆராய்ச்சிக் கருத்துகளை இதுவரை எந்த அறிஞரும் தமிழ்மொழிக்கு வழங்கிடவில்லை. தமிழ்த்துறைக்கு அவர் தொண்டு புதியது; தமிழர்க்கு அவர் கருத்துகள் மயக்கறுப்பன; மேனாட்டார்க்கு அவர் நூல்கள் வியப்பளிப்பன.



படிப்பகம்

www.padippakam.com

அவர் எடுத்துக்கொண்ட முயற்சி அரியது. தொல்காப்பியர் காலத்திற்குப் பின் தமிழ் தன்னை நிலைப்படுத்திக்கொள்ளும் ஒட்டுமொத்த முயற்சிக்குப் 'பாவாணர்' என்றே பெயரிடலாம்!

அவர் கருத்துகள், முறிக்கப்பட்ட தமிழனின் முதுகெலும்பைத் தூக்கி நிறுத்தும் வல்லமை வாய்ந்தன; தூங்கிக் கிடக்கும் தமிழனைத் தட்டியெழுப்பும் வீறு நிரம்பியன; மங்கிக் கிடக்கும் தமிழ் மொழியின் செம்மாப்பினை உலகமெலாம் பறைசாற்றும் ஆற்றல் நிறைந்தன; மொழியாராய்ச்சி என்னவென்றே அறியாமற் கிடந்த தமிழனுக்கு மொழியுணர்வூட்டி, அதன் வழிப் பண்டைய வரலாறுணர்த்தி எழுச்சி பெறச்செய்வன. அவர் பேச்சும் எழுத்தும் தமிழரின் ஒவ்வொரு செவியிலும் அறிவிலும் பட்டு எதிரொலித்தல் வேண்டும். அப்பொழுதுதான் தமிழன் தன்னுணர்வு பெறுவான்; தன்மானங்கொள்வான்; தன்னறிவுணர்வான்; மொழிப்புலங் காணாது வழிப்புலந்தப்பிய தமிழனுக்கு அவர் ஊட்டும் விழிப்புணர்வும், அதனின்றெழும் ஒவ்வோர் ஆய்வு முடிவும் தமிழர்க்கு என்றென்றைக்கும் ஒளிகாட்டி நிற்கும் என்பதில் ஐயமேயில்லை!

ஆனால், வெற்றாரவாரச் சொற்புகழ்ச்சியும் விளம்பரப் போலிமையும் இக்காலத்துக் கற்றாரிடத்தும் நிரம்பி வழியும் காரணியத்தால், மெய்ம்மைக்கும் பொய்ம்மைக்கும் வேறுபாடு காண்பது மிக மிக அரிதாக உள்ளது. அன்றாடம் நடைபெற்று வரும் அரசியல் சூழ்ச்சிகளாலும், அறியாமையாலும், வறுமையாலும் பிற கல்வித் துறைகளின் மேம்பாடுகள் அனைத்தையும் எடுத்துக்கூறவும் ஆளின்றிச் சிந்துவாரற்றுக் கிடக்கும் இக்காலத் தமிழகத்தில் ஏன் பிறந்தோம் என்று அறிஞர் அலமந்து கிடக்கின்றனர். அறிவியலும் வாழ்வியலும் மேனாட்டாரை எந்த அளவிற்கு ஆட்கொண்டனவோ அந்த அளவிற்குத் தமிழகத்தை அறியாமையும் மூடநம்பிக்கையும் ஆட்கொண்டுள்ளன. இவ்விருள்சேர் இருள்நிலையும் ஒருசேரப் பெருகிக் கிடக்கும் இந்நாட்டில் போலிமையும் புன்மையுமே தலைதூக்கி நிற்கின்றன; அதிகாரம் பெறுகின்றன; எனவே உண்மை வலிவற்றுப் போகின்றது.இந்நிலையில் பாவாணரைப் போன்ற பேரறிஞர்களை நாடு இனங்கண்டு கொள்வது குதிரைக் கொம்பே!

தமிழகத்தின் தவக்குறையென்று நாம் எல்லோருமே சொல்லிக் கொள்கின்ற அறிஞரைப் பேணாத குறை தமிழ் நாட்டு மண்ணிலோ, மரங்களிலோ, வீளைவதன்று. அப்படிச் சொல்லியே தப்பித்துக் கொள்ளும் நம் ஒவ்வொருவருடைய மனத்திலும் விளைவதுதான். அது வெறுங் குறையாக மட்டும் நின்றுவிடவில்லை; தமிழக வரலாற்றிலேயே என்றென்றைக்கும் துடைத்தெறியப்படாத கறையாகவே படர்ந்திருக்கின்றது. இதனை. நம்மில் எல்லாரும் திருப்பித் திருப்பி ஒருவர்முகத்தில் ஒருவர் பூசிக்கொள்கின்றோமே யன்றி, இதனைப் போக்குகின்ற முயற்சியை நம்மில் எவரும் எக்காலத்தும் இன்றுவரை செய்யவில்லை. காரணம் நமக்கிருக்கும் பகட்டான பேச்சுதான்; பார்ப்போரை மயங்க வைக்கும் நடிப்புத்தான்; நமக்கேற்பட்ட அரசியல் திளைப்புதான்; அறிவை அறிந்து கொள்ள மறுக்கின்ற அறியாமைச் செருக்குத்தான்; மொத்தத்தில் நம் உடலில் ஊறிக்கிடக்கும் இருண்ட வாழ்க்கையின் ஈடுபாடுதான். இந்



நிலைகள் இந்தத் தலைமுறையிலிருந்து தமிழக மண்ணில் அறிஞர்களே தோன்ற மாட்டார்கள் என்பது திருக்குறள் போன்ற உண்மை; தொல்காப்பியம் போன்ற உறுதி; பாவேந்தர் பாடல்கள் போன்ற தெளிவு!

தமிழனின் வீழ்ச்சிக்கு அரசியல்காரர்களும், குமுகாயச் சீர்திருத்தக்காரர்களும் எத்தனையோ காரணங்களைத் தம் தம் வரலாற்றறிவிற்கேற்பக் கூறினாலும் உண்மையான காரணங்கள் இரண்டு. ஒன்று தமிழனின் குமுகாயச் சரிவு; இரண்டு தமிழனின் மொழிச் சரிவு. இவ்விரண்டு சரிவுகளும் ஆரியப் பார்ப்பனர்கள் என்று இத்தமிழக மண்ணில் காலடி வைத்தனரோ அன்றே தொடங்கின. இச்சரிவுக்குத் தடுப்புச் சுவர் கட்டக் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகவே தமிழன் முயன்றான். ஆனால் ஆரியத்தால் ஏற்பட்ட சரிவை ஆரியத்தைக் கொண்டே சரிசெய்ய முயன்றதால் தோல்வியே கண்டான். இந்த இரண்டு சரிவுகளுக்கும் இந்நாட்டிலுள்ள சமயங்களே மண்வெட்டிகளாகப் பயன்பட்டன. முதற்சரிவைக் கண்டு காட்டியவர் பெரியார் ஈ.வே.இரா. இரண்டாம் சரிவைக் கண்டு காட்டியவர் மறைமலையடிகளார்.

ஈ.வே.இரா. வின் குமுகாய முயற்சி மலையத்துணை யென்றாலும், அதனால் இதுவரை ஏற்பட்டிருக்கின்ற பயன் ஒரு குன்றத்துணையே! அடிகளாரின் மொழிமுயற்சி கடலத்துணை யென்றாலும், அதனால் ஏற்பட்ட பயன் ஒருகால்வாய் அத்துணையே. இவர்கள் செய்த இவ்வளவு அரும் பெரும் முயற்சிகளும் இப்படிப் பயனிற் குன்றியமைக்கு நம்மிடம் உள்ள பக்தவத்சல சுப்பிரமணியன்களும், வையாபுரித் தெ.பொ.மீக் களுமே கரணியம் ஆவர். இத்தகையோரின் உள்ளரிப்புகளால் பெரியாரின் குமுகாயத் தொண்டு அடி பருத்து நுனி சிறுத்துப்போனது; அடிகளாரின் மொழித் தொண்டு அடியகன்று இடை குறுகிப்போனது. இக்கால் இவ்விரு தொண்டு முயற்சிகளும் இளைஞர் தலைமுறையினரின் தோள்களைத் தாவிப் பற்றிக்கொண்டுள்ளன. இத்தலை முறையில் இவற்றில் வெற்றியைத் தேடிக் கண்டானானால் தமிழன் ஆரியத் தினின்று பிழைத்தான்; இல்லெனில் ஆரியத்திற்கே பிழைத்தான்!

பெரியாரின் குமுகாயப் போராட்டம் புறந்தெரிவது. அடிகளாரின் மொழியியற் போராட்டம் அகமொடுங்கியது. அடிகளாருக்குப்பின் இப்போராட்டம் இருளுள் புகைபோல் ஒளி மழுங்கியது . பாவாணரின் விடாமுயற்சியோ, அதனை மீண்டும் புகையுள் தீப்போல் ஒளி சேர்த்தது.

பாவாணர்க்கு இக்கால் அகவை அறுபத்தேழு முடிந்து, அறுபத்தெட்டு தொடங்குகின்றது. 7-2-1902 இல் நெல்லை



படிப்பகம்

www.padippakam.com



மாவட்டத்தில் உள்ள சங்கரநயினார் கோவிலில் பிறந்து, கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ்த் தொண்டிலேயே தம் முழுப்பொழுதையும் செலவிட்டுவரும் இம் மொழியியல் மூதறிஞர் இன்றுகாறும் தமக்கென ஓர் இடத்தையோ ஒரு வீட்டையே கூட உடைமையாக்கிக் கொள்ளாமல், வேலூர் காட்டுப்பாடியில் குடிக்கூலிக்கு ஒரு சிறு வீட்டில் வாழ்ந்து வருகின்றார் எனில், இத்தமிழகம் அறிஞர்களைப் புறக்கணிக்கின்றது என்று கூறுவதா? அல்லது இதில் உள்ள மக்கள் அறிவைப் புறக்கணிக்கின்றார்கள் என்று கூறுவதா?

கருத்துகளைத் தம் அதிகாரிகளுக்கும், அரசியற்சாய் காலுக்கும் ஏற்ப வைத்துக்கொள்ளும் வையாபுரி, தெ.பொ.மீ. போன்ற சிலரின் திறனையோ, அல்லது கழக நூற் காட்சிகளைக் கற்பனை நூல்களாக்கி விற்பனை செய்து பொருள் குவிக்கும் பேராசிரியர் சிலரின் போக்கையோ, அல்லது எவரைக்கொண்டோ எழுதுவித்துத் தம் பெயரைப் பொறித்து வெளியிட்டுக்கொள்ள இசைவு தந்து, அதற்கீடாகப் பெரும்பொருள் பெற்றுக்கொள்ளும் நூலாசிரியர்கள் சிலரின் கள்ள வாணிக அமைப்பையோ பாவாணர் கற்றிருந்தால் அல்லது கைக்கொண்டிருந்தால், இவரும் தமக்கென வீடுகளும் மலைத்தோட்டங்களும் தெருவுக்குத் தெரு, மலைக்கு மலை வாங்கிப் போட்டுக்கொண்டு இயங்கியில் ஊர்ந்துகொண்டு திரியலாம். ஆனால், தன்மானத் திறவுகோலைக் கொண்டுதான் அறிவுப் பூட்டைத் திறக்க முடியும் என்று கண்ட மொழி வரலாற்றுப் பேராசிரியராகிய இவர் இத்தகைய போலித் தன்மைகளைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை.

இவர் கண்டது தமிழ்; உண்டது தமிழ்; உயிர்ப்பது தமிழ்; கொடுப்பது தமிழ்; விண்டது தமிழ்; விளக்குவது தமிழ் என்று தமிழே என்பாகவும், தசையாகவும் குருதியாகவும் வாய்க்கப்பெற்ற தமிழின் முழுவுருவம் பாவாணர் என்னின் வியப்படையவும் வேண்டா; மிகையென்று கருதிவிடவும் வேண்டா. இக்கட்டுரையை எழுதும் இந்தக் கையும், அதை ஆட்டுவிக்கும் இந்த மனமும் எளிதே எழுதிவிடாத சொற்கள் இவை. கோடிப் பொன் கொட்டிக்கொடுத்தாலும் ‘‘இவர் தமிழின் மொத்த உருவம்’’ என்னும் நான்கு சொற்களை இக் கையினிடத்திலிருந்து தகுதியுள்ளவர் தவிர வேறு எவரும் எழுதி வாங்கிவிட முடியாது.

“தமிழின் ஏற்றத்தைப் பற்றி எவ்வளவும் உரையுங்கள். ஆனால் ஆரியத்தை – வடமொழியைப் பற்றி எந்தக் கருத்தையும் கூறாமலிருங்கள்’’ என்று இவருக்குப் பல்கலைக்கழக அதிகாரிகள் அறிவுறுத்தியுங்கூட, ''அப்படி என் கருத்தை இருட்டடிப்புச் செய்து கொண்டு நான் மானத்தோடு உயிர் வாழ முடியாது’’ என்று மறுப்புரை கூறி, நடுவணரசு கொடுக்க முன்வந்த இலவயத்தொகையையும், பல்கலைக்கழகம் கொடுத்துக்கொண்டிருந்த ஊதியத் தொகையையும் ஒருங்கே இழந்த இந்தப் பெரும் பேராசிரியரைப்போல் வேறொரு பேராசிரியரைத் தமிழ் வரலாற்றிலேயே காண முடியாது. தாம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டிவரும் என்று அறிந்திருந்தும், ‘‘எனக்கு வறுமை உண்டு; மனைவி மக்களும் உண்டு; அதோடு கொஞ்சம் மானமும் உண்டு’’ என்று உரைத்த இவர் பெருமிதத்தை என்னென்பது! வறுமையிற் செம்மையை என்னென் றெழுதுவது? காற்காசுக்குத் தமிழைக் காட்டிக்கொடுக்கும் கயவர் மலிந்த இந்நிலத்துப் பாவாணர் தப்பிப் பிறந்த ஒரு தமிழ்ப்பிறவி!

இவரின் அளப்பரிய தமிழாற்றலை முழுவதும் தமிழகம் பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். இவர் இதுவரை எழுதிய செந்தமிழ் நூல்கள் இருபத்தைந்து. இன்னும் ஏறத்தாழ முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் இவரால் எழுதப்பட வேண்டியிருக்கின்றன. அவை அத்தனை நூற்களும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. வீழ்ந்துபட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. இவர் எழுதவிருக்கும் செந்தமிழ்ச் சொற் பிறப்பியலகரமுதலி இவர் ஒருவராலேயே எழுத வியலும் அரும்பெரும் நூல் ஆகும். பல்கலைக்கழகக் காசுகளைக் கைநிறைய வாங்கிக் கணக்கிட்டுக்கொண்டு இன்று தமிழகத்தில் உள்ள அத்தனைப் பேராசியர்களும் ஒன்று சேர்ந்தாலும் எழுதவியலாத அவ்வகர முதலி தமிழுக்கே அழியாத சொத்தாகும். தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக்காக்கும் அரிய ஒளிஞாயிறாகும்.

எத்தனை எத்தனை வகைகளுக்கோ தமிழ் என்னும் பெயரால் இன்று பெருந்தொகை பல்கலைக் கழகங்களாலும் அரசாலும் செலவிடப்பெற்று வருகின்றது. இப்பெருந் தொகையுள் ஒரு சிறு அளவு தொகையை இவர் முயற்சிக்கு ஒதுக்கிக் கொடுத்தாலும், அஃது ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழ்மொழியை மீட்க வல்லது. மறைமலையடிகளால் தோற்றுவிக்கப் பெற்று, இவரால் பேணிக் காக்கப்பெறும் தனித்தமிழியக்கம் செழிப்படைய் அடையத்தான் தமிழ்மொழி துலக்கமுற்று விளங்கும். அப்பொழுதுதான் தமிழ் அறிவியல் மொழியாகவும் வாழ்வியல் மொழியாகவும் வளம்பெறும்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய தென்மொழி இலக்கணப் புலமையும், சமற்கிருதம், கிரேக்கம், இலத்தீனம், உருது, இந்தி, ஆங்கிலம் முதலிய வடமொழி – பிற மொழி இலக்கணப் புலமையும் ஒருங்கே கைவரப்பெற்ற மொழியியல் ஞாயிறான இவர் தமிழகத்தை விளங்கிக் கொண்டுள்ள அளவுக்குத் தமிழகம் இவரை விளங்கிக்கொள்ளுமானால் – பயன்படுத்திக்கொள்ளுமானால் தமிழுக்கு என்றும் அழிவில்லை; தமிழினத்துக்கும் வீழ்ச்சியில்லை; இவர் தலைமையில் அந்த நல்ல நாளை நோக்கி நாம் நடையிடுவோமாக.



படிப்பகம்

www.padippakam.com

# வீரம் செறிந்திட்ட நம் வாழ்க்கை இரத்த விடியல்களாய்...

ஆண்டைகளின் ஆதிக்கச்சாதி வெறிகளுக்குத் தொடர்கின்றன, வெண்மணிப் படுகொலைகள்.. சாதி ஒழிப்புப் பறைமுழக்கம் கேட்டு மீண்டெழுந்த வீரன் மேலவளவு முருகேசன், தேர்தல் களத்தில் படுகொலை செய்யப்பட்டான். மதுரை மேலவளவு பகுதியில் மக்களைத் திரட்டிநிற்கும் சிறுத்தைகள் சாதி அத்துமீற முடியாமல்.. தேர்தல் சனநாயகத்தை மறுத்துத் திமிறி எழ மனமில்லாமல்.. திருப்பித்தாக்க நேரமும் இல்லாமல் தயங்கி நிற்கின்றனர். தாமிரபரணி பாயும் நதிக்கரையில் போர்க்கோலம் பூண்டு புறப்பட்ட வேங்கைகள் 18 பேரை பலிகொடுத்தும் கடைசி மனிதனின் சனநாயகத்தைக் காக்க முடியவில்லை.

1992- இல் நாலுமூலை கிணற்றில் அழுகிய ஈரல்களாய் அரசின் கூலிப் படைகள். உச்சநீதிமன்ற தீர்ப்புக்குப் பின்னரும் தீர்க்க தரிசிகளாய் ஆதிக்கச்சாதி வெறித்தனத்திற்கெதிராக அணிசேராமல் சாதிவெறியர் களை அழித்தொழிக்காமல் இன்னும்அடிமைகளாய் நாம்... நாள்தோறும் பட்டினியால் வாழ்ந்து சாதிவெறி கொண்ட முதலாளிகளுக்கு உழைத்தே நமது உடல் எலும்பாய்த் தேய்ந்து விட்டாலும், இரத்தம் உறிஞ்சும் அட்டைபோல் ஒட்டிக்கொண்ட ஓட்டுக்கட்சி அரசியல் தரகுமுதலாளிகளின் அந்தரங்க வாழ்க்கையே கடைசி மனிதனின் சனநாயகம் என்பதை உணரவில்லை.

எனவேதான் தூத்துக்குடி மாவட்டம் சங்கரலிங்க புரத்தில் தாழ்த்தப்பட்ட கடைசி மக்களின் சனநாயகம் படுகொலை செய்யப்பட்டுள்ளது.

1991-இல் குறிஞ்சான் குளம் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினர் தங்களின் சொந்த நிலத்தில் கோயில் கட்டியது கண்டுகொதித்துப்போன நாயக்கர் சாதிவெறியர்கள் நான்கு தாழ்த்தப்பட்ட இளைஞர்களின் உயிர்மூச்சை (ஆண்குறி) அறுத்து அவர்களது வாயில் திணித்து மகிழ்ந்தனர். அதே ஆதிக்கச சாதிவெறிக்கும்பல்தான் இன்று சங்கரலிங்கபுரத்திலும் இரத்தவெறியாட்டம் போட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், சங்கரலிங்கபுரம் ஊராட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கி ஆண்டுவரும் சாதிவெறிப்பிடித்த நாயக்கர்கள் மற்றும் செட்டியார் சாதியினரால் தாழ்த்தப்பட்ட மக்கள் அமைப்பாவதை பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

இப்பகுதியில் சாத்தை பாக்கியராஜ் என்பவரது மக்கள்தேசம் கட்சியின் முக்கியத் தோழரான விஜயன் என்பவர் தாழ்த்தப்பட்ட மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்கிக் தனது கட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களை அமைப்பாக்கி நாம் யாருக்கும் அடிமை இல்லை! என்று பேசிவந்தது வெறிகொண்ட நாயக்கர்களுக்கும் மேல்சாதி செட்டியார்களுக்கும் பிடிக்கவில்லை.

கடந்த உள்ளாட்சி மன்ற தேர்தலில் பாலகிருஷ்ணன் என்பவர் நாயக்கர் சாதியினர் சார்பில் போட்டியிட்டார். தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக விஜயன் என்பவர் போட்டியிட்டார். தன்னை எதிர்த்து ஒரு பறைப்பயல்

## சங்கரலிங்கபுரத்திலிருந்து... நம் கைகள் உயரவேண்டும்



படிப்பகம்

www.padippakam.com

போட்டியிடுவதா என்று கொதித்தெழுந்த பாலகிருஷ்ணன் நாயக்கர் தனது சாதிக்காரர்களிடம் பேசிச் சாதிவெறியைத் தூண்டிவிட்டுள்ளார்.

18.10.2001 அன்று விஜயனின் அண்ணன் மகன் கணேசனை ஆதிக்கச் சாதிவெறியர்கள் தாக்கியுள்ளனர். மேலும் பொய்வழக்கைப் போட்டுச் சிறையில் அடைத்து விட்டனர். 19.10.2001 அன்று விஜயனை நாயக்கர்களும், செட்டியார் சாதியினரும் சேர்ந்து ஆயுதங்களால் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

தன்னை சாதியைச் சொல்லித் திட்டிக் கடுமையான ஆயுதங்களைக் கொண்டு தாக்கியவர்கள் மீது புகார் கொடுக்க சென்ற விஜயனைத் திருப்பி அனுப்பியுள்ளது காவல்துறை. இதனால் பொதுவழியில் பறையர்கள் செல்லத் தடைவிதித்துள்ளது. இதை மீறிச் சென்ற பெண்களைத் தகாத வார்த்தைகளால் மேல்சாதியைச் சேர்ந்தவர்கள் திட்டியதுடன் தாக்க முயன்றுள்ளனர். அங்கே தேர்தல் பணியிலிருந்த போலீசார் தடுக்கவில்லை. 15/11/2001 அன்று இரவு வெறிகொண்ட சாதிவெறிக்கும்பல் விஜயனைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். எனவே புதூர் போலீசில் விஜயன் புகார் செய்ய சென்றுள்ளார். புகாரை வாங்கமறுத்த போலீசார் விஜயனைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

16/11/2001 காலை 7 மணிக்கு விஜயனை விடுவிக்கக் கோரியும் ஆதிக்கச் சாதியினருக்குத் துணைபோகும் போலீசைக் கண்டித்தும் பொதுமக்கள் சாலைமறியல் செய்துள்ளனர். அப்போது அங்கே வந்த போலீஸ்காரர் முருகன் என்பவர் சீருடை இல்லாமல் தான் யார் என்பதைக் கூறாமலும் பெண்களையும், முதியவர்களையும் தாக்கி காயப்படுத்தியுள்ளார். ஆத்திரம் கொண்ட பொதுமக்கள் திருப்பித் தாக்கியதில் போலீஸ்காரர் முருகன் இறந்துவிட்டார்.

தகவல் அறிந்ததும் டி.ஐ.ஜி. ஜாங்கிட் தனது படையுடன் தூத்துக்கடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், துணைக்காவல் கண்காணிப்பாளர் ஏ.எஸ்.பி. அருண்குமார் ஆகியோர் தலைமையில் சங்கரலிங்கபுரம் சென்று கர்ப்பிணிப் பெண்கள் முதியவர்கள் குழந்தைகள் போன்றோரைத் தாக்கியதுடன் 150க்கும் மேற்பட்டவர்கள் மீது பொய்வழக்கு போட்டுச் சித்திரவதை செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

சங்கரலிங்கபுரம் தாழ்த்தப்பட்ட மக்களைத் தாக்கி விரட்டி அடித்து விட்டு போலீசார் நாயக்கர்களின் துணையோடு தாழ்த்தப்பட்ட மக்களின் கதவுகளைக் கடப்பாரை போன்ற ஆயுதங்களால் உடைத்துத் தங்க நகைகள், ரொக்கப்பணம், தொலைக்காட்சிப் பெட்டிகள், டேப்ரிக்கார்டுகள், கிரைண்டர்கள், போன்ற விலை உயர்ந்த பொருட்களையும், அரிசி, பருப்பு, ஆடைகள் போன்றவற்றையும் திருடிக்கொண்டு சென்றுவிட்டனர்.

மேலும் படித்த இளைஞர்களின் சான்றிதழ்கள், சொத்துப்பட்டாக்கள் போன்றவற்றையும் எடுத்துச்சென்று விட்டனர். இன்று சங்கரலிங்கபுரம் ஊர்திரும்பிய கிராமமக்கள் அகதிகளாக, ஆதரவற்றவர்களாக ஒருவேளை கஞ்சிக்கே வழியில்லாமல் புலம்புகிறார்கள்.

1968-ல் கீழ்வெண்மணியில் 48 தாழ்த்தப்பட்டக் கூலி உழவுத் தொழிலாளர்களைத் தீயிட்டு கொளுத்திக் கொன்று சாம்பலாக்கியதும் அரசும் ஆளும் வர்க்கமும்தான். மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை தாமிரபரணி கரைகளிலே கொன்று புதைத்ததும் இதே அரசும் ஆதிக்கச் சாதிவெறியர்களும்தான். மேலவளவு முருகேசனையும் அவர் உடன் தோழர்களையும் அழித்தொழித்த இதே சாதி வெறிக்கும்பல்தான் கடைசிமனிதனின் தேர்தல் சனநாயகத்தில் சங்கரலிங்கபுரத்தையும் இன்று அழித்துவிட்டது.

வீரஞ்செறிந்தப் போராளிகளே ஆதிக்கச் சாதியரின் வெறித்தனத்தை அழித்தொழிக்க ஆளும் அரசுக்கும் அதன் அடிவருடி ஆதிக்கச் சாதியருக்கும் எதிராக நமது கைகளை உயர்த்துவோம்! ஓரணியாவோம்!



படிப்பகம்

www.padippakam.com

தமிழகத்தில் ஒன்பது பெரும் சிறைச்சாலைகள் உள்ளன.

சிறைச்சாலை ஒவ்வொன்றும் ஒரு நடுக்கோபுரம் ஒன்றையும் அதைச்சுற்றி ஆறு, எட்டு அல்லது பத்து என்கிற எண்ணிக்கைகளில் தொகுதிகளையும் கொண்டனவாக இருக்கும்.

ஒவ்வொரு தொகுதியிலும் அறைகள் பலவாகவும் பெரிய அடைப்புகள் பலவாகவும் இருக்கும்.

சிறைவாசிகளைப் பகுத்து அடைப்பதற்கும், சிறைவாசிகள் பொதுப்பட அனைவரும் ஒன்றாக இணைந்து விடக்கூடாது என்பதற்காகவும் இத்தகையப் பகுப்புகளை ஆங்கிலேயே அரசாங்கம் அந்தக் காலங்களில் செய்து வைத்தது.

அந்தப் பழைய கட்டுமானங்களை மாற்றாமல் இன்றைய அதிகார வெறிபிடித்த அரசுகளும் அப்படியே தொடர்ந்து வருகின்றன.

ஆங்கிலேயன் போனபின் கட்டப்பட்ட சிறை என்று ஒரு சிறை கூட இல்லை. கட்டப்பட்ட புழல் சிறை கூட திறக்கப்படாமல் கிடக்கிறது.

இதெல்லாம் ஒருபக்கம் எனில் கொடுக்கப்படுகிற உணவுகளும் ஒன்று போலனவாகவும் ஒரே சுவையுள்ளதுமாகவும் இருப்பதும் பெரும் வியப்பே.

காலையில் சிறிய கிண்ண அளவு சோறும் துவையலும், பகல் ஒரு கட்டிச் சோற்றுடன் குழம்பு, மோர் என்றும், மாலை அதேபோல் கட்டிச் சோற்றுடன் குழம்பும் கையளவு வேர்க்கடலையும் இதுதான் சிறை உணவு.

அதை எப்படித்தான் ஒரே சுவையில் செய்கிறார்களோ? தண்டனைச் சிறையாளிகள் அனைவருக்கும் ஒரே வகையான உடை, ஒரேவகையான படுக்கை விரிப்பு, போர்வை, தட்டு, குவளை, உணவு வகை இப்படி இருக்கச் சிறையாளிகளைப் பகுப்பதில் மட்டும் அண்மைக் காலங்களில் சிறைகளில் ஒரு புதியமுறையை அரசு உருவாக்கியிருக்கிறது.

பாளைச் சிறைகளில் உள்ள சிறைச்சாலைகளைச் சாதிவழிப் பகுப்பதும் ஒவ்வொரு சாதியினருக்கும் ஒரு தொகுதி எனப் பிரித்துப் போடுவதுமான நடைமுறையை உருவாக்கி உள்ளனர்.

அதேபோல் கோவைச்சிறையில் இந்து மதம் சார்ந்தோரையெல்லாம் சில தொகுதிகளிலும், இசுலாமிய மதத்தினரையெல்லாம் சிலதொகுதிகளிலும் பகுத்து வைத்துள்ளனர்.

அது மட்டும் அல்லாமல் இந்து மதம் சார்ந்த சிறைவாசிகளுக்கான உணவு சமைப்புப் பொறுப்பை ஆர்.எஸ்.எஸ். காரர்களுக்கும், இஸ்லாமிய மதம் சார்ந்த சிறைவாசிகளின் உணவு சமையல்பொறுப்பை இசுலாமியமத இயக்கங்களிடமும் அளித்துள்ளனர்.

எனவே ஆர்.எஸ்.எஸ். தொடர்புடையவர்கள் இந்து விழாக்கள் என்பதாகச் சொல்லி அன்றைய நாளில் சிறப்புணவு செய்து அதையே மதப்பரப்பலுக்கான நிகழ்ச்சியாக மாற்றுகின்றனர்.

**சிறைச்சாலைகளில் தூண்டப்படுகின்றது மதவெறியும், சாதிவெறியும்.**

மேலும் தம் தொகுதிகளுக்கு உள்ளேயே இந்துமதக் கடவுளர் படங்களைப் பெரிய பெரியவகையில் அகண்டபாரதப் படங்களோடு வரைவதும், பா.ஜ.க., இந்து முன்னணியெனும் பெயர்களைச் சுவர்களில் தட்டுகளில் வரைவதும் வழக்கமாகிப்போனது.

அதேபோல இஸ்லாமிய அமைப்பினரும் தங்கள் உணவுவகைகளைத் தனியே செய்து கொள்கின்றனர்.

மேலும் மதவெறியுணர்வுகள் தூண்டப்படுகிற வகையில் பா.ஜ.க. அரசு செய்கிற நிகழ்வுகளைச் சிறைக்குள் எதிரொலிக்கிறபடியான நிகழ்வுகள் செய்யப்படு கின்றன.

கருவிப் (ஆயுத) பூசை அன்று சிறைக்குள் இருக்கிற அந்த இயக்கச் சார்புடையோருக்குக் காவி வண்ணத்தில் கட்டைகளைப் பரிசாகத் தருவதும், சிறைநெறிகளுக்கு இசையப்படாத பூணூல் கயிறு, உத்திராட்சக் கொட்டை மணிகள் எல்லாம் மாட்டிக்கொண்டு உலவுகின்றனர். அரைஞாண் கயிறு உள்ளிட்ட துண்டு கயிறு கூட இசையப்படாத சிறை நிர்வாகத்தில்தான் இவ்வளவும் நடக்கிறது. மதச் சார்பின்மை பின்பற்றப்படுவதில்லை.

ஒவ்வொரு தொகுதிக் குள்ளும் ஒரு பிள்ளையார் கோயில், அல்லது சிவன் கோயில் எனப் பத்துக்கும் மேற்பட்ட கோயில்களைக் கட்டி வைத்திருக்கின்றனர். ஆனால் கிறித்துவ மத ஆலயங்களோ, இசுலாமிய மசூதிகளோ கட்ட இசையப்படவில்லை.

சிறைக்கூடமே பொது வழிபாட்டுக்கூடங் களைக் கட்டி அதில் வழிபாடு செய்விக்கக் கூடிய பொது நிலைகளைப் பின்பற்றுவதில்லை.

சிறைக்குள் மதப்பரப்பல்கள் என்கிற பெயரில் பார்ப்பன இயக்கங்களை நுழைப்பதும், யோகப்பயிற்சி , தியானப் பயிற்சி என்கிற பெயரில் இந்துப் பார்ப்பனியக் கருத்துக்களைப் பரப்புவதுமான பணிகள் நிறைய நடத்தப் பெறுகின்றன.

ஆக மொத்தத்தில் சிறைகளுக்குள்ளும் மதக்கலவரங்களையும், சாதிக்கலவரங்களையும் நடத்துகிற நோக்கத்தில் செயல்படுகிறவர்களுக்கு சிறைநிர்வாகம் தூண்டுகோலாக அமைகிறது.

எனவே மதவெறிக்கு எதிராகவும் சாதிமத ஆளுமைகளுக்கு எதிராகவும் இயங்குகிற முற்போக்குச் சிந்தனையாளர்களுக்கு இத்தகைய மதவெறிப் போக்குகளை மறுக்க வேண்டியதும் கடமையாகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

# சத்தியமங்கலத்தில் சதி அம்பலம்

அன்று கோட்சே பார்ப்பானுக்கு சுன்னத் செய்து காந்தியைக் கொன்றது ஆர்.எஸ்.எஸ். கும்பல். எப்படியும் காந்தியைச்சுட்டவுடன் சுற்றியிருப்பவர்கள் கோட்சேவைக் கொன்றுவிடுவார்கள். அவன் சுன்னத் செய்திருப்பதைப் பார்த்து ஒரு இசுலாமியன் தான் காந்தியைக் கொன்றுவிட்டான் எனச் செய்திபரவும். நேரம்பார்த்து கலவரங்களை கட்டவிழ்த்து விட்டு இசுலாமியர்களைக் கொத்து கொத்தாகக் கொலை செய்யலாம் என்பது ஆர்.எஸ்.எஸ். வகுத்த திட்டம். அவர்கள் நினைத்ததுபோல் கோட்சே கொல்லப்படாமல் பிடிபட்டான். திட்டமிட்டே தனக்குச் சுன்னத் செய்ததை ஒத்துக்கொண்டான். ஆர்.எஸ்.எஸ். வெறியர்களின் சூழ்ச்சி அம்பலமானது.

அதேபோல் சூழ்ச்சியைத் திட்டமிட்டே செய்து அம்பலமாயிருக்கிறது இந்துமுன்னணி கும்பல் .

சத்தியமங்கலம் அருகிலுள்ள சதுமுகை என்னும் சிற்றூரில் கோவில் சிலைகளின் தலைகளைத் துண்டித்தும் பிள்ளையார் சிலைக்குச் செருப்பு மாலைகளைப்போட்டும் கலவரங்களைத் தூண்ட முயற்சித்துள்ளது இந்துமுன்னணி கும்பல். இரவோடிரவாக இப்படிச்செய்துவிட்டு ஓடிய சத்தியமங்கலம் ஒன்றிய இந்துமுன்னணி ஒன்றிய இணைஅமைப்பாளர் செல்வகுமார், இந்துமுன்னணி தீவிரவாதி மஞ்சுநாதன் இருவரையும் பொதுமக்கள் மடக்கிப்பிடித்துப் போலீசில் கொடுத்ததால் இந்தச் சதி அம்பலமாகி இருக்கிறது.

இந்தப்பகுதியில் முஸ்லீம் மக்கள்மீது கலவரங்களைத் தூண்டி கொலைவெறித் தாக்குதல் நடத்தவும் பெரியார் திராவிடர் கழகம் நடத்தவிருந்த பொதுக்கூட்டத்தில் கலவரத்தை ஏற்படுத்தவும் தான் நாங்களே கோயில்சிலைகளை உடைத்து செருப்பு மாலை போட்டோம். எங்கள் மேலிடத்து உத்திரவு இது. என இருவரும் வாக்குமூலம் கொடுத்து தங்கள் செயலை உறுதி செய்துள்ளனர்.

“ஊர் ரெண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்” என்பார்கள். ஊர் ஒற்றுமையாக இருந்தால் பார்ப்பானுக்குப் பிடிக்காது. எப்படியாவது கலவரங்களைத் தூண்டி இசுலாமிய மக்கள் மீது தாக்குதல் தொடுக்க வேண்டும். பல ஆயிரம் உயிர்களைக் கொன்று இரத்தம் குடிக்க வேண்டும். அப்போதுதானே தன் பார்ப்பனியம் ஆளுமையோடு வாழமுடியும் என்பதிலேயே பார்ப்பனிய வெறிபிடித்த இயக்கங்கள் எவ்வளவு சரியாக இருக்கின்றன.

1925 இல் ஆர்.எஸ்.எஸ் தொடங்கப்பட்டதிலிருந்து இந்நாள் வரை நிகழ்ந்துள்ள மதக்கலவரங்கள் எதுவும் தன்னிச்சையாக நடந்நததில்லை. தற்போதைய மதக்கலவரங்கள் வரை அனைத்துக் கலவரங்களும் பார்ப்பன வெறி இயக்கங்களால் தூண்டிவிடப்பட்டவையே! எத்தனையோ சான்றுகளுடன் அவர்களின் இத்தகைய சதிவேலைகள் அம்பலப்படுத்தப்பட்டாலும் இதுபோன்று கையும் களவுமாக பிடிப்பட்ட நிகழ்ச்சிகள் ஒன்றிரண்டு தான் நடந்துள்ளன. அந்தளவுக்கு மதவெறியுணர்வைத் தூண்டி விடுவதிலும் சதிவேலைகளைத் திட்டமிட்டுக் கமுக்கமாக நடத்துவதிலும் கைதேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் இத்தகைய சூழ்ச்சி வேலைகளுக்குத் தக்கவாறு செய்திகளைப் பரப்புவதற்கு ஊடகங்கள் அனைத்தும் துணை செய்கின்றன.

தன்னுடைய சதிவேலை அம்பலமாகிவிட்டதால் உடனடியாக சத்தியமங்கலம் கிளையை களைத்துவிட்டது இந்து முன்னணி!

பார்ப்பன வெறிபிடித்த இயக்கங்களின் சதிவேலைகளை சதுமுகை மக்கள் அம்பலப்படுத்தியதுபோல் ஒவ்வொரு பகுதியிலும் விழிப்புடன் இருந்து மக்களுக்கு எதிரான அவர்களின் சூழ்ச்சி வேலைகளை அம்பலப்படுத்தி மக்களே அவர்களைத் துரத்தியடிக்குமாறு செய்வோம்! பார்ப்பனிய வெறி இயக்கங்களிடமிருந்து மக்களைப் பாதுகாப்போம்!

**பிள்ளையார் சிலைக்கு இந்து முன்னணி செருப்பு மாலை**



படிப்பகம்